

# செங்காந்தள் - நாவல்

முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் தி.பரிமளா

புத்தகக்குறிப்பு

9 789391 115463



# செங்காந்தள் - நாவல்

## Title Verso


**TITLE OF THE BOOK : Chenkaantal - Novel**

**புத்தகத்தலைப்பு : செங்காந்தள் - நாவல்**

**EDITORS : Dr D.Maheswari &**
**Dr T. Parimala**

**தொகுப்பாசிரியர் : முனைவர் த.மகேஸ்வரி &**
**முனைவர் தி.பரிமளா**

**FIRST EDITION** : 2021

**முதல் பதிப்பு** : 2021

**PAGES/ பக்கங்கள்** : 160

**PRICE/ விலை** : 200

**ISBN NUMBER** : 978-93-91115-46-3

**CONTACT NUMBER** : 8526769556

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001. Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001. Tamil Nadu



**பதிப்புரிமை /Copyright © 2021 – முனைவர் த.மகேஸ்வரி / Dr. D.MAHESWARI**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையை சூடியவன் முருகன் என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சார பெருமையை அடையாளப்படுத்தும்; செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும்.

செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது. தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ் சமூகம் தமிழ்த்தேன் பருக; தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளை புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# மதிப்புரை

*சூல்* உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள் என்னும் தலைப்பிலான புத்தகப்பகுதியானது இந்தியாவின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்த தமிழகத்தையும் அக்காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியலையும் வெளிப்படுத்துகின்றது. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகில் உள்ள ஊரான உருளைக்குடி என்னும் கரிசல் பூமியில் வாழும் மக்களின் வாழ்வியலைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளது. வேளாண் மக்கள் கல்வி கற்காதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களின் பட்டறிவு கற்றவர்களைப் பிரமிக்கவைக்கும் என்பதனை சில நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகிறன. பல்வேறு சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஒற்றுமையுடன் இருந்து நிலத்தைப் பயிர் செய்து நாட்டுக்கு வளம் செய்ததை இந்நாவல் சுட்டிக்காட்டுகிறது.

வயல்பகுதிகளில் நாமக்கோழிகள் வந்தால் ஊர் செழிப்பாகும், தூக்கணாங்குருவிகள் கண்மாயில் உள்ள மரங்களின் உச்சிக்கொம்பில் கூடு கட்டினால் நல்லமழையும், தாடிக்கொம்பில் கட்டினால் மழைவராது,

தூக்கணாங்குருவிகள் கூடு கட்டினால் அது ஆண்பனையாக இருக்கும், சாதகுருவி சப்தமிட்டால் சாவு வரும் என்ற பழந்தமிழர்களின் நம்பிக்கைகள் காலந்தோறும் பாதுகாக்கப்பட்டிருப்பதையும் இந்நாவல் விளக்குகிறது.

*மூணாங்கொடி* நாவல் உணர்த்தும் சமூக அவலங்கள் என்னும் தலைப்பிலான இவ்ஆய்வுப் புத்தகப்பகுதியானது இந்தியக் கிராமங்கள் குறிப்பாக தமிழகக் கிராமங்கள் சாதியத்தை இன்றளவும் கைவிடாதிருப்பதைக் காட்டுகிறது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூகநீதி என்பது போராட்டத்திற்குப் பின்பே கிடைக்கிறது. சிலநேரங்களின் அவை அதிகாரவர்கத்தால் அடக்கப்பட்டு விடுவதையும் இந்நாவல் எடுத்துக்காட்டுகிறது. பேராசிரியர் ரகுதேவன் எழுதிய மூணாங்கொடி நாவல் தமிழ்நாட்டில் உள்ள ஒருகிராமத்தில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகப் போராட்டத்தை விவரிக்கிறது. ஒரே கிராமத்தில் வசிக்கும் இருவேறு சமுதாய மக்கள் சாதியத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனிக்குடியிருப்பு, அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில் அலட்சியம், வேலைக்குத் தகுந்த கூலி தராமல் உழைப்புச் சுரண்டல், சாதியை காரணமாக்கி சகமனிதராக மதிக்கப்படாமை, கல்வி மறுப்பு, கிராமக்கட்டுப்பாடு சொல்லி அடக்குதல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி அடிமைப்படுத்தப்படுத்துவது, பொருளாதாரத்தில் பின்தங்கி இருத்தல், வயது வித்தியாசமின்றி பெயர் சொல்லி அழைத்தல், பெண்களை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்குதல், பணியிடங்களில் திறமையை மதிக்காமல் அலட்சியப்படுத்தல், சொந்த நாட்டில் சொந்த ஊரில் இரண்டாந்தர குடிமக்களாக மதிக்கப்படுவதை இந்நாவல் எடுத்துரைக்கிறது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கான நாடகம், நாவல், சிறுகதை, கவிதை ஆகியவை அம்மக்களால் மட்டுமே படைக்கப்படுகிறது. தங்கள் துன்பங்களையும் சமூகத்தின் அலட்சியத்தையும் தங்களால் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்று நம்புகின்றனர். தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்தை கல்வியும், பொருளாதாரமும் மட்டுமே முன்னேற்றும் என்பது அவர்களின் நம்பிக்கையாக

இருக்கிறது. கிராமம், நகரம் என்ற பாகுபாடு இல்லாமல் இறப்புச்சடங்கு செய்வது, பிறக்கும் குழந்தைக்கு தீட்டுக்கழிப்பது, பிரசவம் பார்ப்பது, ஊரைச்சுத்தம் செய்வது என்று ஒவ்வொரு காரியத்திற்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் சேவை பிறருக்குத் தேவைப்படுவதையும் இந்நாவலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றைக் காட்டிலும் தீண்டாமையிலிருந்து விடுதலை என்பதே ஒடுக்கப்பட்ட மக்களின் கனவு என்பதை இவ்ஆய்வுப் புத்தகப்பகுதியானது உணர்த்துகிறது.

*ஆகாயம் காணாத நட்சத்திரம்* என்னும் நாவலில் மனித உறவுகள் என்னும் தலைப்பிலான இவ்ஆய்வுப் புத்தகப்பகுதி திரு.இந்திராசௌந்தராஜன் எழுதிய ஆகாயம் காணாத நட்சத்திரம் என்னும் நாவல் பிரதிபலிக்கும் மனித உறவுகளைப்பற்றி வெளிப்படுத்துகிறது. குடும்ப உறவுகளிடையே உள்ள பிரதிபலன் எதிர்பார்க்காத அன்பினைப்பற்றி விவரிக்கிறது.

இந்த உலகமானது குடும்பம், குடும்ப உறவு என்பதை மையமாகக் கொண்டது. குடும்ப உறவுகளை மனிதச்சமூகம் ஒதுக்கித்தள்ள முடியாது. குடும்ப உறுப்பினர்களின் எதிர்பார்ப்பில்லாத உறவுப்பிணைப்பு என்பது வெறும் குடும்ப உணர்வாக மட்டும் இல்லாமல் சமூகத்தையும் அரவணைக்கும் உணர்வாகவே இருக்கும். தனிமனிதனின் சிந்தனைகளும் எண்ணங்களும் செய்கைகளும் உறவுகளின் அரவணைப்பைப் பொறுத்தே அமைகிறது. பொறுமை, கணிவு, இன்சொல், உதவும் குணம் ஆகியவை மற்றவரிடம் செலுத்தும் பொழுது ஒரு நல்ல உறவை சுலபமாக ஏற்படுத்திக்கொள்ள முடியும். ஒருவருக்கு நாம் உதவி செய்யும் பொழுது நமக்கு அதனால் என்ன ஆதாயம் கிடைக்கும் என்பதை நினைத்துப் பார்க்காமல், சுயநலத்தோடு இல்லாமல் இருக்க வேண்டும். சுயநலம் இல்லாத அன்பினால் எதையும் சாதிக்கமுடியும் என்பதையும், குடும்ப உறவுகளின் பலமே வாழ்க்கையின் அஸ்திவாரம் என்பதையும் கட்டுரையாளர் எடுத்துக் கூறுகிறார்.

முத்துலட்சுமி ராகவன் நாவல்களின் கதையமைப்பும் கதைமாந்தர்களும் எனும் தலைப்பிலான இவ்ஆய்வுப் புத்தகப்பகுதி நாவலின் கதைப்போக்கினையும், பாத்திரப்படைப்புகளை வெளிப்படுத்தும் விதத்திலும் அமைந்துள்ளது. தற்கால நாவலாசிரியர்கள் தங்கள் படைப்புகளில் யதார்த்தம் என்ற பெயரில் நகரமாந்தர்களின் வாழ்க்கைமுறை, அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகள், பாலியல், உளவியல் சார்ந்த செய்திகள் முதலியவற்றை மையமாகக் கொண்டு அமைக்கின்றனர்.

நாவலாசிரியர் முத்துலட்சுமி ராகவன் தனது புதினங்களில் படைத்துள்ள கதைமாந்தர்கள் சமகாலத்தவர்கள். இன்றைய நவீன வாழ்க்கையைப் பிரதிபலிப்பவர்கள். வாழ்வியல் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பவர்கள். இவரது நாவல்களில் மொழிநடை, மையக்கரு, அவற்றை வெளிப்படுத்தும் விதத்தினாலும், கதைமாந்தர்களுக்குத்தரும் முக்கியத்துவத்தினாலும் பிற நாவலாசிரியர்களில் இருந்து வேறுபடுவதை இவ்ஆய்வுப் புத்தகப்பகுதிச் சுட்டிக்காட்டுகிறது.

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1 | *சூல்* உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்<br>மு.சுமதி | 1 - 31 |
| 2 | *மூணாங்கொடி* நாவல் உணர்த்தும் சமூக அவலங்கள்<br>முனைவர் தி.பரிமளா | 32 - 73 |
| 3 | *ஆகாயம் காணாத நட்சத்திரம்* என்னும் நாவலில் மனித உறவுகள்<br>முனைவர் மா. முரளி | 74 - 109 |
| 4 | முத்துலட்சுமி ராகவன் நாவல்களின் கதையமைப்பும் கதைமாந்தர்களும்<br>செ.ரேவதி | 110 -154 |

# Life Ethics as Evinced by "Sool"

**M. Sumathi,** Ph.d Scholar, Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi, TamilNadu, India.
**Email id:** Sumathisanjay67@gmail.com
**ORCiD**: **https://orcid.org/0000-0003-1242-054X**
**DOI: 10.5281/zenodo.5520490**

## Abstract

*In the novel "Sool", So.Tharuman takes us before the time of independence and portrays the scenario of the life in the hands of monarchs. It shows the life, culture, beliefs, trust, and other life ethics in a lucid manner. Nature plays a lead role as hero and heroine. Humans are the part of nature and Nature is portrayed as God. Nuture guides everything to hurnans. In the novel of "Sool", lifestyle of people is binded with a natural setting filled up with lake, birds and animals. All these contents are reexplained in this essay. The novel "Sool" describes an array of life ethics and eco-biological thoughts. The speciality of the novel indicates the methodology of life amidst nature, food, dress, ornaments culture, medicine, belief of karma, worship, message on puranas, and metaphysical belief. The novel "Sool" describes all such matters in an ecological perspective. Hence, this article evinces the facts related to the theme as present in the novel.*


**Isbn Number**: 978-93-91115-46-3

**Keywords:** Life Ethics, “Sool”, Karma, Nature.

## References

[1] Cho.Dharman. *Sool.* Adaiyaalam, Puthanatham, Trichy, 2016.

[2] Dr A. Kavitharani. *Aramum Araneri Chinthanaigalum.* New Century Book House Pvt Ltd, Chennai-600098, 2013.

[3] Dr A. Alis. *Pathitrupathu Mulamum Uraium*. New Century Book House Pvt Ltd, Chennai-600098.



**Isbn Number**: 978-93-91115-46-3

# சூல் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

**மு.சுமதி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத்துறை,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி தமிழ்நாடு, இந்தியா.
**Email id:** Sumathisanjay67@gmail.com
**ORCiD**: **https://orcid.org/0000-0003-1242-054X**
**DOI: 10.5281/zenodo.5520490**

## ஆய்வு சுருக்கம்

சூல் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள் என்ற கட்டுரையானது சூல் புதினம் நூற்சிறப்பு – வாழ்வியல் - இயற்கை – உணவு – உடை – அணிகள் - பழக்கவழக்கங்கள் - கள்ளுண்ணல் - ஊழ் பற்றிய நம்பிக்கைகள் புராணச் செய்திகள் - கடவுள் வழிபாடு – பேய் பற்றிய நம்பிக்கைகள் போன்றவற்றை எடுத்துரைக்கிறது.

**கலைச்சொற்கள்: *சூல்,* வாழ்வியல் சிந்தனைகள்**

## முன்னுரை

இலக்கியங்கள் அனைத்தும் மனிதர்கள்


**Isbn Number**: 978-93-91115-46-3

வாழும் காலகட்டத்தை அக்காலத்திற்கே சென்று பயணிக்க வைப்பதாக அமைகின்றன. சோ.தர்மன் அவர்களால் எழுதப்பட்ட ‘சூல்’ புதினமும் விடுதலை கால கட்டத்திற்கு முன்பு உள்ள மன்னராட்சிக்கு நம்மை அழைத்துச் சென்று, அக்காலகட்ட மக்களின் வாழ்வியல், பண்பாடு, கலாச்சாரம், நம்பிக்கைகள் போன்றவற்றை அறிய வைக்கும் தகவல் பெட்டகமாக அமைந்துள்ளது. நம் முன்னோர்களின் வாழ்வியல்கூறுகளை எடுத்துக் கூறும் விதமாக ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

***சூல் புதினத்தின் நூற்சிறப்பு***




**Isbn Number**: 978-93-91115-46-3

சூல் புதினம் சோ.தர்மன் அவர்களால் 2016 ஆம் ஆண்டு எழுதி வெளியிடப்பட்டது. இந்நாவலுக்கு 2019 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது அளிக்கப்பட்டது. சோ.தர்மன் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் வசிக்கிறார். சூல் நாவலில் இவரின் புனை உலகம் முழுவதும் கரிசல் பூமியைச் சுற்றியே அமைந்துள்ளது. அடித்தள மக்களையே இவர் கதாநாயகர்களாக ஆக்கியுள்ளார். நாவல், சிறுகதை, ஆய்வுநூல்கள் என்று பல நூல்களை இலக்கிய உலகத்திற்கு வழங்கி பெருமை சேர்த்துள்ளார். இவருடைய படைப்புகள் இந்தி, மலையாளம், ஆங்கிலம் என்று பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பல்வேறு அமைப்புகளில் இருந்து பல விருதுகளைப் பெற்ற சிறந்த படைப்பாளியாகத் திகழ்கிறார்.


**Isbn Number**: 978-93-91115-46-3

## ‘புதினம்’ எழுந்ததன் பின்புலம்

சோ.தர்மன் அவர்கள் பிரஷ்னெவ் எழுதிய ‘தரிசு நில மேம்பாடு’ என்ற புத்தகத்தைப் படித்துள்ளார். இப்புத்தகத்தின் தூண்டுதலே இவரைச் சிந்திக்க வைத்து புதினம் உருவாகக் காரணமாக அமைந்தது. அதாவது விவசாயிகள் என்றவர்கள் சாதாரணமாகவர்கள் அல்ல. அவர்கள் படிக்காத மேதைகள், விவசாயிகளின் அனுபவ நுண்ணறிவு என்பது விஞ்ஞானப்பூர்வமான பகுத்தறிவுக்கு சற்றும் குறைந்ததல்ல. தமிழ்நாட்டின் சம்சாரிகள் நுண்ணறிவு படைத்தவர்கள் என்பதைப் பல்வேறு தளங்களில் புரிய வைத்துள்ளார் ஆசிரியர்.

**வாழ்வியல்**

வாழ்கின்ற மக்களுக்கும் வாழப்போகும் அடுத்தடுத்த தலைமுறை மக்களுக்கும் வாழ்கின்றவர்கள் எடுத்துக்காட்டாக வாழ வேண்டும். பிறருக்குத் தூண்டுதலாக வாழ்வு அமைய


**Isbn Number**: 978-93-91115-46-3

வேண்டும். "அன்றைய மனிதனின் வாழ்க்கையை இன்றைய மனித வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இன்று அடைந்துள்ள வளர்ச்சி நிலைகள் அனைத்தும், முந்தைய தலைமுறையின் ஆழ்ந்த அறிவினாலும், ஆள்வினையாலுமே ஏற்பட்டது" (முனைவர் அ.கவிதாராணி. அறமும் அறநெறிச் சிந்தனைகளும்). இத்தகைய வாழ்வியல் சிந்தனைகளைச் சூல் புதினத்தின் மூலம் நம்மால் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

**இயற்கை**

ஒரு நாட்டின் அணிகலன்களாக இருப்பவை இயற்கையே. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை *சூல்* புதினத்தின் மக்கள் வாழ்ந்துள்ளனர். உருளைக்குடி என்ற ஊரில் உள்ள கண்மாயைச் சுற்றி உள்ள மக்களை அவர்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுவதாக இந்நாவல் அமைந்துள்ளது.


**Isbn Number**: 978-93-91115-46-3

**வரதம்பட்டி, பீக்கிலிபட்டி, வள்ளிநாயகிபுரம், ராவுத்தன்பட்டி, நல்ல முத்தன்பட்டி, வீரப்பட்டி, கட்டுராமன்பட்டி, சென்னையம் பட்டி இத்தனை ஊர்களுக்கும் பெரிய கண்மாய் அதுவும் கரம்பை மண் வளமுள்ள கண்மாய் உருளைக்குடி கண்டமாய் தான் (பதிற்றுப்பத்து மூலமும் உரையும், முனைவர் அ.ஆலிஸ் (உ.ஆ), ப.எண்-1)**

*சூல்* நாவலில் உள்ள சூல் என்ற வார்த்தைக்கு ஆசிரியர் அளிக்கும் விளக்கமும் குமட்டூர் கண்ணனார் பதிற்றுப்பத்தில் கூறிய பொருளும் ஒப்புநோக்குவதாக உள்ளது.

“வரைமருள் புணரிவான பிசிர் உடைய, வளிபாய்ந்து அட்டதுளங்கு இருங்கமஞ்சூல்” சூல் கொண்ட வயிறு நிறைந்திருப்பது போல கடல், நீரால் நிறைந்து தோன்றுவதால் நீர் இங்குச் சூல் எனப்பட்டது. நிறைந்த நீர் என்ற பொருளில்


**Isbn Number**: 978-93-91115-46-3

கமஞ்சூல் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு பெண் வயிற்றில் குழந்தைகள் சுமப்பது போல், கண்மாய் பெரிய வயிற்றோடு கருவுற் றிருக்கும் தாய் போல் சூல்கொண்டு இருக்கும். அப்போது பிற தேசங்களிலிருந்து பல்வேறு விதமான பறவைகள் அங்கு பயணித்து வரும். செடிகளும், கொடிகளும், மரங்களும் நிறைந்து கண்மாய்க் கரையை அரண் போல் காத்து நிற்கும்.

கண்மாயைச் சுற்றிலும் வயல்வெளிகள் நிறைந்திருக்கும். நிறைமாதப் பெண்ணின் வயிற்றில் ஊர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் பிள்ளை போல மீன்கள் கண்மாயில் துள்ளி விளையாடும். பசுக்கள், ஆடுகள், எருமைகள் போன்ற விலங்கினங்கள் தாகத்திற்குத் தண்ணீர் குடிக்கும் கண்மாய் எட்டயபுரம் ராஜாவின் ஆளுமைக்கு உட்பட்ட செழுமையான நிலப் பரப்பில் அமைந்திருந்தது. பல சாதிகள் நிறைந்த இவ்வூரில் அனைத்துச்


**Isbn Number**: 978-93-91115-46-3

சாதியினரும் கண்மாயைப் பாதுகாப்பதிலும், பராமரிப்பதிலும் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு நீரை வணங்கி நாட்டிற்கு வளம் சேர்ந்தனர்.

**உணவும் விருந்தோம்பலும்**

காட்டில் வேலை செய்பவர்கள் கானப்பயறுத் துவையலும் கம்மங் கஞ்சியும் தூக்கு வாளிகளில் கொண்டு செல்வார்கள். ஏர் உழுபவர்களின் கஞ்சிக் கலயத்தைக் காகங்கள் எடுத்து உண்டுவிடும். இதனை,

> **காட்டில் வேலை செய்கிறவர்களுக்குப் பெரிய திண்டாட்டம் கஞ்சிக் கலயங்களை மறைத்து வைப்பது. மண்ணுக்குள் குழி தோண்டிப் புதைத்து இலந்தை முட்களால் கூடி வைத்தாலும் சரி, தூக்குவாளிகளை மரத்தில் தொட்டில்களைப் போல் கட்டித் தொங்கவிட்டாலும் சரி, காக்காய்களின்**


**Isbn Number**: 978-93-91115-46-3

**கண்ணுக்குத் தப்பாது. மூடியை எப்படித் திறக்கின்றன என்பதே யாருக்கும் புரியாத புதிர். ஒரு நொடியில் கஞ்சி பூராவும் தரையில் கொட்டப்பட்டிருக்கும். கொஞ்சம் நஞ்சம் உள்ள கஞ்சியில் கரிசல் மண்ணை வாரி இறைந்திருக்கும் (சூல், பக் : 121)**

விவசாயிகள் மண்ணுக்குள் கலயத்தைப் புதைத்து வைத்திருந்தாலும் காகக் கூட்டங்கள் எடுத்துச் சிதறிவிடும். தாங்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்து உண்ணும் உணவை எவ்வாறு பாதுகாத்து உண்டனர் என்பதை நமக்கு புலப்படுத்துகின்றன. கடலைச் செடிகளில் உள்ள கடலையை எலிகள் மறைத்து வைத்திருக்கும். அவற்றை ஒரு சில மனிதர்கள் எடுத்து உண்பர். பன்னிமாடன் புலமாடனின் மகனிடம்,

**யேல, சின்னமணி, நான் போயி வாய்க்கால் தண்ணி குடிச்சிட்டு வாரன், பொந்துக்குள்ள**


**Isbn Number**: 978-93-91115-46-3

> **கடல நெறய்யா இருக்கு, கைய ஓட்டி அள்ளி அள்ளி துண்டுல போடு. வேற யாரையும் கிட்ட நெடுங்க விடாமப் பார்த்துக்கோ. (சூல், பக்: 219)**

என்று கூறுவதில் இருந்து மக்கள் எலிப் பொந்துகளில் உள்ள கடலையையும் எடுத்து உண்டதை அறிய முடிகிறது.

மக்கள் தண்ணீர் தாகத்திற்காக ஊரில் தெலாக் கிணறு என்ற ஒன்றை வெட்டி தாகத்தைத் தணித்துள்ளனர்.

> **தெலாக்கிணறுகள் ஊரைச் சுற்றிலும், காடுகளிலும் பல இடங்களில் இருக்கும் காடுகளில் வேலை செய்பவர்கள், ஆடுமாடு உழவு அடிப்பவர்கள், வழிப்போக்கர்கள் போன்றவர்களுக்காகவே வெட்டப்பட்டவை. சின்னதாக ஒரு கிணறு, குறைந்த ஆழம், ஒரு தெலா, ஒரு நீண்ட கல் தொட்டி (சூல், பக்: 13)**


**Isbn Number**: 978-93-91115-46-3

இன்றைய கால கட்டங்களில் நீர் அருந்த வேண்டும் என்றால் பணம் இருந்தால் மட்டுமே முடியும். ஆனால் சூல் நாவலில் உள்ள மக்கள் மனிதர்களுக்கு மட்டும் அல்லாமல் விலங்குகளுக்கும் சேர்த்து நீர் நிலைகளை அமைந்திருப்பது போற்றுதற்குரிய சிந்தனையாகும்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் இன்றியமையாத ஒன்று உணவு ஆகும். இவ்உணவினை இலவசமாகவே அக்காலத்தில் பெற்று வந்துள்ளார்கள். கொப்புளாயி என்ற பெண் காட்டுப்பூச்சி என்பவன் பட்டணத்திற்குச் சென்று உணவினை காசு கொடுத்து வாங்கி உண்டான் என்பதைக் கேட்டு நிலைகுலைந்து போகிறாள் வியாபாரம் என்றால் என்னவென்று தெரியாத காலகட்டம் அது. மக்களுக்குத் தன்,

**காடுகளில் விளையும், தானியங்கள், பயறுகள், காய்கறிகள், கிழங்குகள், வத்தல்,**


Isbn Number: 978-93-91115-46-3

> **மல்லி என்று சகலத்தையும் வாரிவாரி வந்தவர்களுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்து வாழும் சம்சாரிகளில் ஒருத்தி தானே கொப்புளாயி (சூல், பக் : 164)**

கொப்புளாயி தான் வளர்த்த எருமைகளிடம் இருந்து கிடைக்கும் பாலை இருக்கண்குடி மாரியம்மன் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களுக்கு மோர் அளித்து அவர்களின் தாகத்தைத் தீர்க்கிறாள்.

**உயிர்வதை**

பசுவினைக் கொன்று உண்டால் பெறும் பாவம் சேரும் என்பதை இப்புதினம் நமக்கு உணர்த்துகிறது. எட்டையபுரம் மகாராஜா பசுவினை உண்பது பெரும் பாவம் என்றும், குற்றம் என்றும் கருதினார். நங்கிரியான் என்பவன் பசுக்களைப் பாதுகாக்கும் தொழிலைச் செய்பவன். அவன், பசுவின் மாமிசம் சாப்பிட வேண்டும் என்று நினைத்த போதெல்லாம் சிறு கத்தியை உள்ளங்


**Isbn Number**: 978-93-91115-46-3

கைக்குள் மறைந்து வைத்துக் கொண்டு. பசுவின் ஆசனவாய்க்குள் அல்லது கருவாய்க்குள் கையை நுழைத்து, வயிற்றுக்குள் இருக்கும் குடல், கருப்பை, இரைப்பை போன்ற உள் உறுப்புக்களைச் சிதைத்து விடுவான். இரண்டு அல்லது மூன்று நாட்களில் பசு இறந்துவிடும். இறப்பிற்கான காரணத்தினை யாராலும் எளிதில் கண்டுபிடிக்கமுடியும். இவ்வாறு சாவடிக்கப்பட்ட பசுக்களின் கதையைக் கேட்கும் போதே மன்னரின் கண்களும் கலங்கியது.

**பண்டமாற்றுமுறை**

பருத்தி, வத்தல், ஆமணக்கு போன்ற நவதானியங்களைக் கொடுத்து, அவித்த பயிறும், சீனிக்கிழங்கும் கொடுத்து பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை வெயிலாம் பிள்ளையிடம் வாங்கி உண்கின்றனர். அங்கு அக்காலகட்டத்தில் பணம் என்பதே இல்லை. பண்டமாற்று முறையிலேயே மக்கள் உணவினை உண்டு வாழ்ந்து வந்துள்ளனர்.


**Isbn Number**: 978-93-91115-46-3

## அணிகலன்கள்

உருளைக்குடி கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அணிகலன்கள் அணிந்ததாகக் காணப் படவில்லை. எலியன் என்ற பனைமரம் ஏறுபவனும், பிச்சை ஆசாரியும் வீரபாண்டிய கட்டபொம்முவின் குதிரைக்கு லாடம் அடித்ததால் அம்மன்னர் அவர்களுக்குப் பரிசாக இருபத்து ஐந்து தங்க ஆபரணங்களை அளித்தார். ஆனால் வெள்ளைக் காரர்களின் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் மன்னருக்கு உதவுவது தவறான செயலாகக் கருதப்பட்டது. எனவே கடைசிவரை அந்த ஆபரணங்களை அவர்கள் அணியாமல் தலைமுறை தலைமுறையாக இரகசியமாக பூமிக்கடியில் புதைத்துப் பாதுகாப்பாக வைத்தனர். கடைசி வரைக்கும் அவர்கள் அப்புதையலை அனுபவிக்கவே இல்லை. இக்காட்சிகள் நம் நாட்டின் வளங்களை


**Isbn Number**: 978-93-91115-46-3

நம்மால் முழுமையாக அனுபவிக்க முடியாத அவலநிலையைக் காட்டுகிறது.

**நம்பிக்கைகள்**

நாமக்கோழி என்ற பறவையின் வரவானது ஊரின் செழிப்பைக் காட்டுவதாக அமையும். நன்றாக மழை பெய்து நாட்டில் விவசாயம் குறைவின்றி நடக்கும் என்பதை எடுத்துக் கூறுவதாக நாமக்கோழியின் வரவினை மக்கள் நம்புவார்கள்.

> **ஊரில் முதன் முதலில் நாமக்கோழி பார்ப்பவனுக்குக் காளியம்மன் கோயில் பொங்கல், அன்றைக்கு நீர்ப்பாய்ச்சியின் கைகளால் வேட்டி, துண்டு கிடைக்கும். ஊரே கூடி நின்று கூத்தாடும். இந்த வருடம் சங்கிலிப் பயல் கண்ணில் தட்டுப் பட்டியிருக்கிறது. (சூல், பக் : 67)**

நாமக்கோழியின் வரவு என்பது ஒரு பறவையின் வரவு மட்டுமல்ல கிராமத்தின்


**Isbn Number**: 978-93-91115-46-3

செழிப்பையும், அவ்வருட வெள்ளாமையின் உத்திரவாதத்தையும் மழை அதிகரிப்பையும் நீர்நிலைகளின் நிரம்பலையும் உறுதி செய்யும் என்று மக்கள் நம்பினார்கள்.

தூக்கணாங்குருவிக் கூடுகள் கண்மா மரத்தில உச்சிக் கொப்புல கூடுகட்டினால் நல்ல மழை என்றும், தாடிக் கொப்பில் கெட்டினால் மழை சரிவர பொழியது என்றும் நம்பிக்கை கொண்டிருந்தனர். சாகுருவி சப்தம் இட்டால் யாராவது இறந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாக முத்துவீரன் தாத்தா கூறுகிறார்.

**தூக்கணாங்குருவிகள் எந்தெந்தப் பனையில் கூடு கட்டுகிறதோ அதுக அம்புட்டும் ஆண்பனைக. ஒன்னு ரெண்டு கூடுக தொங்குகிற பனைக அம்புட்டும் பொட்டப்பனைக (சூல், பக் : 9)**


**Isbn Number**: 978-93-91115-46-3

பறவைகளின் அறிவின் மீது நம்பிக்கை கொண்டு இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் விவசாயிகள்.

**கள்ளுண்ணல்**

கள்ளுண்ணல் என்னும் பழக்கம் இப்புதினம் முழுவதும் வந்துள்ளது. பனைமரத்திலிருந்து எடுக்கப்பட்ட கள்ளினை மக்கள் விரும்பி அருந்தியுள்ளனர். தொத்தல் பகடை என்பவன் சக்கிலியர் இனத்தைச் சேர்ந்தவர். அவர் பனைப்பட்டி ஆலமரத்து ஓரம் புதிதாகத் திறந்த கள்ளுக் கடையில் சென்று கள் அருந்தினார். உருளைக்குடி கள் போல் இல்லை என்று வீரசிங்கத் தேவரிடம் கூறுகிறான். ஒரு நாள் வீரசிங்கத் தேவர் உரளைக்குடி கள்ளினை வாங்கி தொத்தல் பகடைக்கு அளிக்கிறார். எல்லோரும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். தொத்தல் வாசனை பிடித்தவுடன் நெடுஞ்சாண் கிடையாகக் குப்புற


**Isbn Number**: 978-93-91115-46-3

விழுந்தான் தேவரும் மற்றவர்கள் விக்கித்துப் போனார்கள்.

> **டேய் தொத்தல், நிய்தாண்டா அசல் குடிகாரன், கள்ளோட வாசனைய வச்சே, இது எந்த ஊருகள்ளுனு கண்டு பிடிக்கிறது சாமானியமா? யாரலும் முடியாதுடா. டேய், இன்னையிலிருந்து நிய் உயிரோட இருக்கிற வரைக்கி நம்ம கடையில எவ்வளவு கள் குடிச்சாலும் துட்டு கெடயாதுடா. இது இந்த வீரசிங்கத் தேவரோட உத்தரவுடா இனிமே உருளக்குடி கள்ள மத்த ஊருக் கள்ளுகூட சேக்காம ஒனக்குத் தனியா வச்சிருந்து ஊத்த சொல்றேன்டா (சூல், பக் : 34)**

என்று அவர் கூறியதை அவர் மகன் கார்மேகத்தேவர், அவர் தந்தை இறந்து மூன்று ஆண்டுகள் ஆன பின்பும் சொன்ன சொல்லைக் காப்பாற்றி வருகிறார்.


**Isbn Number**: 978-93-91115-46-3

**பழக்கவழக்கங்கள்**

பழக்கவழக்கங்கள் என்பது தம் முன்னோர் களிடமிருந்து பாரம்பரியமாகக் காணப் படும் செயல்கள் ஆகும். தமிழ் நாட்டில் இருக்கும் பெரும்பான்மையான மக்கள் வெற்றிலை போடும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர்.

> **உருளைக்குடி கொடிக்கால் பிள்ளைமார்களில் மகாலிங்கம் பிள்ளையை வெற்றிலைக் கொடிக் காலோடு தான் சேர்த்துப் பார்க்க முடியும். மற்றவர்கள் எல்லாமே அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்கள் தான். காரணம், வெற்றிலை பயிரிடுவதில் உள்ள தொழில் நுணுக்கம் அவரிடம் அடைபட்டுப் போனது தான். மகாலிங்கம் பிள்ளையின் முன்னால் அத்தனை கொடிக்கால் பிள்ளைமார்களும் அடங்கிப் போய் அவர் சொல் கேட்டு நடந்தார்கள். (சூல், பக் : 94).**


**Isbn Number**: 978-93-91115-46-3

சேலத்திற்குச் சென்று மாடுவாங்கப் போனபோது கடைக்காரரிடம் இன்னும் ஒரு வெற்றிலை கொடுங்கள் என்று சொன்னதற்கு,

> **அய்யா இந்த வெத்தல எங்கேயிருந்து வருதுனு ஒமக்குத் தெரியுமா? தெக்க எட்டயபுர மகாராஜாவோட ஜமீனு, உருளகுடியில இருந்து வருது அப்படின்னாராம். யேய், தாயோளி எட்டு வீடுதான் பிள்ளைமாரு வீடு. நம்ம ஊரோட பேரு, இந்த உள்ளங்கை அளவு வெத்தலையால ஒலகம் பூராவும், பரவுதே (சூல், பக் : 92)**

இவ்வரிகளின் மூலம் அக்காலத்துக் கிராமத்து மக்கள் வெற்றிலை போடும் பழக்கத்தைக் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**மருந்து**

கிராமங்களில் தொடர்ந்து மழை


**Isbn Number**: 978-93-91115-46-3

பொழிவதனால் கால்களில் சேற்றுப்புண் ஏற்படும். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை புளியங்காயை தீயில் சுட்டு அதிலிருந்து வரும் பசை போன்ற குழம்பு சிறந்த மருந்து என்று பூசிக் கொள்வர்.

**தெய்வங்கள்**

அய்யனார் நீருக்கு காவல் காக்கும் தெய்வங்களுள் முதன்மைத் தெய்வமாகக் காணப்படுகிறார். இவருக்குப் பொங்கலிட்டு பூசை செய்த பின்பே விவசாயம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். நீர்ப்பாய்ச்சியின் வம்சத்தில் வந்த கருப்பன் என்பவர் மக்களின் நலனுக்காக தன் உயிரையும் பெரியதாக மதிக்காமல் தன் மூச்சை அடக்கி மடையைத் திறந்து விடுகிறார். எனவே இவரும் கருப்பன்சாமி என அய்யனாரின் அருகிலேயே கண்மாய்க்குக் காவல் காத்து நிற்கிறார். குறவன் சாமி, கள்வன்சாமி இருவரும் மனிதர்கள் இவர்கள் இறந்த பின் பேய்களாக


**Isbn Number**: 978-93-91115-46-3

மாறுகின்றனர். இவர்களைக் கும்பிடுவோம் என்று மக்கள் கேட்டதற்கிணங்க இவர்கள் இருவரும் சாமிகளாக மாறி ஊருக்கு நல்லது செய்கிறார்கள். உளிக்கருப்பன்சாமி என்பவர் சக்கிலியக் குடி ஜனங்களின் துடிப்பான சாமி. எட்டயபுர மன்னரே நேரில் வந்து தரிசித்துச் சென்றுள்ளார்.

இரண்டு வருடத்திற்கு ஒரு முறை திருவிழா நடக்கும். சக்கிலியக்குடியில் இருளப்பசாமி மிகவும் துடியானவராகக் காணப்படுகிறார். மகாராஜா பிடிமண் எடுத்துச் சென்ற பின் அனுமன் முனியை விரட்டியதாக செய்திகள் காணப்படுகின்றன. சக்கிலியர்கள் செய்யும் செருப்பை அணிந்து இருளப்பசாமி வேட்டைக்குச் செல்வதாக நம்புகின்றனர். மழை தொடர்ந்து பெய்யும் போது தூள்மாவில் இடித்து குலவைச் சத்தமிட்டு ஊர்க்காரர்கள் அனைத்து சாதியினரும் இணைந்து தூள்தாவு சாமியைக் கும்பிடுவார்கள். இரண்டு


**Isbn Number**: 978-93-91115-46-3

பெண்களின் மேல் அருள் வந்தது. ஒரு கைப்பிடி அளவு, தூள்மாவினை அள்ளி நீர்ப்பாய்ச்சியிடம் போதுமாடா என்று சாமி கேட்கும்.

**சாமி, இனிமே வேண்டவே வேண்டாம் சாமி, போதும் சாமி (சூல், பக் : 91)**

கூட்டத்தில் இருந்தவர்கள் அனைவரும் வேண்டவே வேண்டாம், போதும் சாமி என்று சொன்னவுடன் மழையை வழி அனுப்பி வைக்கும் விதமாக தூள்மாவினை அள்ளி எறிவார்கள். மேகம் புகையாகப் போய் மறைந்து மழையைப் பொழிவதை நித்தி விடும். இவ்வாறாக, உருளைக்குடி மக்கள் மழையை நிறுத்துவதற்கும் சாமி கும்பிட்டுள்ளனர்.

**ஊழ் பற்றிய நம்பிக்கைகள்**

தீமை செய்தவர்கள் பாவத்திலிருந்து கண்டிப்பாக விடுபட முடியாது. அவர்கள் பரம்பரையே தண்டனைக்கு உள்ளாகும் என்ற


**Isbn Number**: 978-93-91115-46-3

கருத்து நாவலின் பல்வேறு இடங்களில் பரவிக் காணப்படுகின்றது.

சித்தாண்டி என்பவருக்கும் அவருடைய பங்காளி இருளப்பனுக்கும் கொட்டரத்தில் நாற்றுப் படப்பை வைப்பதில் சிறு தகராறு ஏற்பட்டது. சித்தாண்டி இருளப்பனைப் பழி வாங்குவதாக எண்ணி சொக்கலிங்கபுர ஊரில் உள்ள கண்மாயை நிறை சூலியின் வயிற்றைப் பிளப்பது போல் கரையைக் கீறினான் கண்மாயை உடைத்து நீரினை எதற்கும் உதவாமல் செய்துவிட்டான். அவன் செய்த இச்செயலால் ஊரே வறுமையில் வாடியது. ஆடுமாடுகள் தண்ணீர் இல்லாமல், தீவனம் இல்லாமல் திண்டாடியது. குருவி, கொக்கு, நண்டு, நந்தை, நாரை, உள்ளான் சிறகி அனைத்தும் பசியால் வாடியது.

ஒரே நாளில் ஊமையாகிப் போன கண்மாய் மூன்றே மாதங்களில் பேசவும், சிரிக்கவும், பாடவும்


**Isbn Number**: 978-93-91115-46-3





கற்றுக்கொண்டது. ஆனால் சித்தாண்டியின் மனைவி மயிலுவின் வயிற்றிலிருந்து பிறந்த இரட்டைக் குழந்;தைகள் ஊமைகளாகப் பிறந்திருந்தன. மயிலு கூப்பாடு போட்டாள். தான் செய்த தவற்றினை எண்ணி, அதற்கு வருந்திய சித்தாண்டி அய்யரிடம் பரிகாரம் கேட்டான்.

> **ஜென்மப் பாவியே, படப்புக்குத் தீ வைத்துக் கால்நடைகளைப் பட்டினி போடுபவன், பசுவைக் கொல்பவன், பச்சைக் குழந்தையிடம் திருடுபவன், கண்மாயை உடைத்து ஊரையே அழிப்பவன் அத்தனை பேருக்கும் பரிகாரம் மட்டுமே வாழ்வு தரும். போ, பேய் குளம்வெட்டு, மரம்நடு, அன்னதானம் செய், அடுத்த தலைமுறை சுகம் பெறும், ஓடு நிற்காதே (சூல், பக் : 210)**

என்று கூறுகிறார். ஒருவர் செய்யும் பாவம் அவர்களைத் தாக்காமல் வாரிசுகளைத் தாக்கி அதன்


**Isbn Number**: 978-93-91115-46-3

மூலம் தினமும் அழ வைக்கும். அப்பாவத்தினைப் போக்க புண்ணியம் செய்து ஈடு செய்கின்றனர் மக்கள்.

**மாற்றங்களும் ஏமாற்றங்களும்**

விடுதலைக்குப் பின்னர் நம்நாட்டில் நிறைய நீர்நிலைகள் அழிந்துவிட்டன. நீர்ப்பாய்ச்சிகள் இருந்த போது கண்மாய்கள் அய்யனாரப்பனின் பாதுகாப்போடு நன்றாகச் செயல்பட்டன. சங்கண் செடிகளும், பனைமரங்களும் நிறைந்திறந்த கண்மாய்கள் இன்று கருவேல முட்செடிகளால் மூடப்பட்டுள்ளன. ஆற்று மணல்கள் திருடப்பட்டு, செயற்கையாக சிலேப்பி மீன்களை வளர்த்து நாட்டு மீன்களை அழித்துள்ளோம். சேவலுடன் சேராமல் கோழிகள் முட்டைப் போடுகின்றன.

பசுமாடுகள் காளைகள் இன்றி ஊசி மூலம் கரு உண்டாக்கப்படுகின்றன. வெள்ளைக்காரன் நமக்கு சுதந்திரம் அளித்த போது முப்பத்து


**Isbn Number**: 978-93-91115-46-3

ஆறாயிரம் கண்மாய்கள் ஊரணிகள், குளங்கள், ஆறுகள் போன்ற நீர் நிலைகளையும் ஒப்படைத்தான். இன்றைய அரசியலில், பசுமைப் புரட்சி தந்த நவீன வேளாண்மையும், பகுத்தறிவுப் புரட்சி தந்த சித்தாந்த அறிவும் சம்சாரிகளை முன்னேற்றயுள்ளதா என்ற கேள்வியை இந்நாவல் நம்மிடம் முன்வைத்துள்ளது.

**நிறைவாக**

சூல் புதினத்தில் அரசன் முதல் குடிமக்கள் வரை உள்ள அனைவரும் இயற்கையாக நேசிப்பவர்களாகவும், இயற்கையோ இயற்கையாக வாழ்ந்து வந்துள்ளார்கள். நீர் நிலைகள், கால்நடைகள், பறவைகள், மரங்கள், கடவுள்கள் போன்ற அனைத்தையும் போற்றிப் பாதுகாப் பவர்களாக அறச் சிந்தனை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். புதினத்தின் இறுதியில் கால மாற்றத்திற்கேற்ப மக்கள் சுயநலம் கொண்ட


**Isbn Number**: 978-93-91115-46-3

வர்களாக, இயற்கையைப் போற்றாமல் செயற்கை வண்ணம் பூசி அடுத்த தலைமுறையினருக்கு வாழ வழி இல்லாமல் உலகை மாற்றியவர்களாக காட்டப்பட்டுள்ளார்கள். இனிவரும் சமுதாயத்தினர் நம் முன்னோர்களின் ஆளுமையைப் போற்றி இயற்கையைப் பாதுகாத்தல் நம் கடமை என்பதை இப்புதினத்தின் மூலம் அறிந்து தெளிவுபெற முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

[1] சோ.தர்மன். சூல், அடையாளம் பிரஸ், புத்தாநத்தம், திருச்சி, 2016

[2] முனைவர் அ. கவிதாராணி. அறமும் அறநெறிச் சிந்தனைகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600 098, 2013.

[3] முனைவர் அ.ஆலிஸ் (உரையாசிரியர்),


**Isbn Number**: 978-93-91115-46-3

பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600 098.

# Social Injustices indicated in the Novel *Moonaankodi*

**Dr T. Parimala**, Assitant Professor, Department of Tamil, Mannar Thirumalai Naicker College, Madurai-625004, TamilNadu, India.
**Email id:** jeyamadhan05@gmail.com
ORCiD: **https://orcid.org/0000-0002-5235-5888**
**DOI: 10.5281/zenodo.5520521**

## Abstract

*Literature shows us the background of society to the pages of life unknown to others. Movies, TV dramas, advertisements, social media, shows the problems in the society or community. Exploitation is seen everywhere and can be seen in the lives of fellow men. Man abuses the power of education, to enslave others lives and the problems regarding economic backwardness in various aspects are seen in the novel* ***Moonaankodi.*** *The author records the suffering of the people in his novel and how they suffer to get liberation is highly pathetic. People of the novel have succumbed to the discrimination of the caste and untouchability has long been the stamp of the oppressed people. Even modern India is full of secular and democratic ideas; many people suffer in the name of untouchability. Indeed, Untouchability is the modern way to pressure the people of the lower classes and make*

*them subjugated and eternally oppressed. As it portrays all sorts of endangers targeted upon the suppressed people, **Moonaankodi** novel is undoubtedly a novel dedicated to the oppressed.*

**Keywords:** Abuses, Liberation, Oppressed, Moonaankodi, Exploitation.

**References**

[1] Ragudevan. Moonagodi, Pavai Publications, Chennai - 600014, 2014.
[2] Anbuselvam. Kodumai Muriyum Kalakam, 1,Appavu Kiramai theru, EllishRaod, Chennai - 600002, 2004.
[3] Gunasekaran. K.A. Thalith Kalai Kalasaram, Ragas Screens, Agamathu Vanika valagam, Rayapet, Chennai - 600014, 1999.
[4] Kavigar Agathasi. Haihoo Thoppu, Tai Veliyeedu, Chennai – 600026.
[5] Kavigar M.Metha. Kanneer Pookkal, Thirumagal nilayam, T.Nagar, Madras - 600017.
[6] Ravikumar(Editor). Thalith enra thanithuvam, Thalith kalaivizhkulu, Neyeivezhi-1, 1996.
[7] Stalin Rajagam. Vanginagaram Kandhan, Periya oorseri, Madurai - 625502, 2008.

# மூணாங்கொடி நாவல் உணர்த்தும் சமூக அவலங்கள்

**முனைவர் தி.பரிமளா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை-625004, தமிழ்நாடு, இந்தியா.
**Email id:** jeyamadhan05@gmail.com
**ORCiD**: **https://orcid.org/0000-0002-5235-588**8
**DOI: 10.5281/zenodo.5520521**

## ஆய்வுச்சுருக்கம்

மூணாங்கொடி நாவலில் ஒடுக்கப் பட்டவர்களுக்கான தனிக்குடியிருப்பு, கோயில், சுடுகாடு, வேலைகள், கல்வி மற்றும் பணியிடங்களில் உள்ள பாகுபாடுகள், காதல் திருமணங்களால் ஏற்படும் வன்முறை மற்றும் தாக்குதல்கள், பெண்கள் மீதான வன்முறைகள், பொதுவெளியில் உள்ள பாகுபாடு போன்றவற்றை இவ்ஆய்வுக் கட்டுரை விளக்குகிறது.

## முன்னுரை

இலக்கியங்கள் ஒரு சமுதாயத்தின்


**Isbn Number**: 978-93-91115-46-3

பின்புலத்தை, பிறர் அறிந்திராத பக்கங்களை நமக்குக் காட்டுகின்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த இலக்கியங்கள், மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்குகின்றது. பெரும்பாலான இலக்கியங்கள் வாழ்க்கையின் இன்னொரு பகுதியை நமக்கு தெளிவுப்படுத்துவதில்லை. திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், விளம்பரங்கள் போன்ற சமூக ஊடகங்கள் சமுதாயத்தில் வாழக்கூடிய ஒரு பகுதி மக்களின் வாழ்க்கையை மட்டுமே விளம்பரப்படுத்துகின்றன. கிராமம், நகரம் என்ற பாகுபாடு இல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்களின் முனகல் ஒலி அதிகாரம் என்னும் வரம்புக்குள் அடங்கி விடுகிறது.

1990ம் ஆண்டுகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இயக்கங்கள் இந்தியா முழுவதும் தோன்றத்தொடங்கியது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு


**Isbn Number**: 978-93-91115-46-3

நேர்ந்த அநீதிகள், எதிர்குரல் எழுப்பிய, அவர்களின் குரல்வளை நசுக்கப்பட்ட விதம் பொதுவெளியில் தெரியலாயிற்று. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இயக்கங்கள் தலித் இயக்கங்கள் என அழைக்கப்பட்டது. அம்மக்களின் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கும் ‘தலித்தியம்’ அல்லது ‘தலித் இலக்கியம்’ தோன்றலாயிற்று. தலித்துக்களே தலித் இலக்கியம் படைத்தனர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கான நாடகம், சிறுகதை, நாவல், கவிதை போன்ற இலக்கியங்கள் வெளிவரத் தொடங்கின. இவ்விலக்கியங்கள் அம்மக்களின் வட்டார மொழியில் அமைக்கப்பட்டது. “தொட்டால் தீட்டு, இரட்டைக் குவளை முறை, பொதுக்கிணற்றில் நீர் எடுக்க முடியாத நிலை, பிற இனத்தாரோடு திருமண உறவு தடுக்கப்படுதல், கல்வி மறுப்பு, அடிப்படை வசதியில்லாத குடியிருப்பு” போன்ற அம்மக்களின்


**Isbn Number**: 978-93-91115-46-3

துன்பங்கள் வெளியுலகிற்கு பகிரப்பட்டன. விழிப்புணர்வு கொண்ட அம்மக்களின் வாழ்க்கை இன்றளவும் போராட்டக்களமாகவே உள்ளது.

ஒடுக்கப்பட்ட அம்மக்களின் ஆற்றாமையை வெளிப்படுத்தும் விதமாக பேராசிரியர் ரகுதேவனின் *'மூணாங்கொடி நாவல்'* அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஒரு கிராமத்தில் வாழும், ஒடுக்கப்பட்ட சமூகத்தின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பேச்சுமொழியில் தந்துள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனிக்குடியிருப்பு, அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில் அலட்சியம், உழைப்புச் சுரண்டல், சக மனிதராக பார்க்கப்படாதது, கல்வி மறுப்பு, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அடிமைப்படுத்தப்படல், பொருளாதாரத்தில் பின் தங்கி இருத்தல், பாலியல் துன்புறுத்தல், அதிகார வர்க்கத்தை உதவியாகக் கொண்டு அடித்தட்டு மக்களை ஒடுக்க நினைத்தல்,


**Isbn Number**: 978-93-91115-46-3

பணியிடங்களில் திறமையால் உயர்பதவிக்கு வந்தால் அலட்சியப்படுத்தப்படல், கிராமத் திருவிழாவில் செலவு செய்வதற்காக பணமும் உழைப்பும் சுரண்டப்படுதல், தலைமுடி வெட்டும் கடைகளில் கீழே உட்கார வைக்கப்பட்டு முடிவெட்டப்படுதல், பெயர்களால் அறியப்படும் ஒருவரின் சாதி, அலுவலகங்களில் துப்புரவுப் பணியாளர்களுக்குத் தனி இடமின்றி மரத்தடிகளிலும், வராண்டாக்களிலும் தரையில் அமர்ந்திருத்தல், ஊடகங்களில் திருமணத்திற்கு மணப்பெண், மணமகள் தேடும் விளம்பரங்களிலும் சாதி வாரியாக விளம்பரப் படுத்தப்படுவது (Matrimonial) என்று பல்வேறு கோணங்களில் சாதியம் பயன்படுத்தப்படும் துயரத்தை தனது மூணாங்கொடி நாவலில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் நாவலாசிரியர்.

**ஆசிரியர் குறிப்பு**


**Isbn Number**: 978-93-91115-46-3

மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரகுநாதன் அவர்களால் எழுதப்பட்ட இந்நாவல், தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கியப் பணிக்கான அமைப்பின், நிதி உதவி பெற்று வெளிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் தான் எடுத்துக்கொண்ட கதைக்களத்திற்கேற்ப வட்டார மொழி நடையைப் பயன்படுத்தியிருக்கிறார். கதை சொல்லும் உத்தியும், கதைக்கேற்ற கதாபாத்திரங்களும், சமூகத்தின் இன்றையச் சூழலை நமக்கு உணர்த்துகிறது. எத்தனை காலமானாலும், எந்தச் சூழலிலும் சாதி மாறாது என்பதனை இந்நாவல் கட்டமைக்கிறது.

**இந்தியக் கிராமங்களின் முகம்**

இந்திய சமூகம், வருணாசிரமக் கொள்கைகளால் கட்டமைக்கப்பட்டது. நம் நாட்டில் இருக்கும் சாதியப் பிரிவுகளே இதற்குச் சான்று.


**Isbn Number**: 978-93-91115-46-3

மேலைநாடுகளில் நிறம், இனம் (நாடு சார்ந்து) பார்க்கப்படுகிறது. நம்நாட்டில் உள்ள சாதீயப்பற்றைப் போன்று மேலைநாடுகளில் நிறவெறி உண்டு என்பதற்கு அமெரிக்காவில் பிளாய்டு என்னும் கருப்பினத்தவர் கொல்லப்பட்டது ஒரு உதாரணமாகும்.

நம் நாட்டில் சாதி ஒரு அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. சாதி என்னும் அடையாள அட்டை, கல்விக்கும் வேலைக்கும் உத்தரவாதம் அளிக்கிறது. சாதியப்பாகுபாடு நகரங்களில் வெளிப்படையாகப் பார்க்கப்படுவதில்லை. ஆனால் கிராமங்களில் வெளிப்படையான வாழ்க்கை முறைகளால், மேல்சாதியினர் வாழும் குடியிருப்பு என்றும், கீழ்சாதியினர் வாழும் சேரிப்பகுதி என்றும், இருவேறு குடியிருப்புகளைக் கொண்டதாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது. நகர வாழ்க்கையில் பொருளாதாரத்தால் மேம்பட்டோர்,


**Isbn Number**: 978-93-91115-46-3

பொருளாதாரத்தால் பின்தங்கியோர் என்ற முறையிலேயே பார்க்கப்படுகிறது.

கிராமங்களில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம், அக்கிராமத்தில் உள்ள உயர்ந்த சமூகம் என்று சொல்லப்பட்ட மக்களின் வாழ்க்கையைச் சுற்றியே அமைந்துள்ளது. அதனாலேயே ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றிற்கு போராட வேண்டியுள்ளது. தாங்கள் வாழும் பகுதியிலும், பொதுவெளிகளிலும் போராட்டத்தையே இவர்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது. தங்கள் சமுதாய மேம்பாட்டிற்காகப் போராடும் இவர்களின் மனத்தின்மை காலந்தோறும் வலுவடைந்து வருவதை ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

மூணாங்கொடி நாவலும் அத்தகையதொரு வலுவான கதையமைப்பினைக் கொண்டிருக்கிறது.


**Isbn Number**: 978-93-91115-46-3

தான் பிறந்து, வளர்ந்த இடத்திலேயே மனிதர்கள் சக மனிதர்களால் மூன்றாந்தரக் குடிகளாக நடத்தப்படுவதையே மூணாங்கொடி நாவல் உணர்த்துகிறது. ஒருபுறம் ஏழ்மை, இன்னொருபுறம் குடிநீருக்காக கையேந்தி நிற்கும் நிலை. அரசுகொடுக்கும் சலுகைகளைப்பெற முடியாமல் தவிக்கும் நிலை. கல்விகற்கும் இடத்திலும் சக மாணவர்கள் மதிக்காதது. ஒடுக்கப்பட்ட மக்கள் பிறரால் வயது வித்தியாசமின்றி பெயர் சொல்லி அழைக்கப்படுவது என்று பல்வேறு கோணங்களிலும் நாவலாசிரியர் கதையை கதாபாத்திரங்களின் வழி நகர்த்திச் செல்கிறார்.

**மூணாங்கொடி நாவலில் சமூக அவலங்கள்**

மூணாங்கொடி நாவலில் சுட்டிக் காட்டப்படும் சமூக அவலங்கள் சாதியக்கட்டமைப்பின் அடிப்படையிலானது. அவற்றை,

**1. வாழுமிடத்தில் உள்ள சாதியக் கட்டமைப்பு**


**Isbn Number**: 978-93-91115-46-3

**2. கல்வி பயிலும் இடம் அல்லது வேலை பார்க்கும் இடத்தில் ஏற்படும் சிக்கல்கள்**

**3. பழமைவாதம் மாறாமல் பார்த்துக்கொள்வது**

**4. பாலியல் துன்புறுத்தல்கள்**

என்று வகைப்படுத்திக் காணலாம்.

**1.வாழுமிடத்தில் உள்ள சாதியக் கட்டமைப்பு**

பழந்தமிழகத்தில், மக்கள் தாங்கள் செய்யும் தொழிலின் அடிப்படையிலேயே, வேறுபடுத்திப் பார்க்கப்பட்டனர். தமிழகத்தில் சாதியக் கட்டமைப்புமுறை சோழர்கள் காலத்தில் வலுவடைந்ததாக ஆய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் சேரிகளில் வாழ்பவர்கள், வருணாசிர முறைப்படி மேலைக்குடியானவர்களுக்கு சேவை செய்வதற்காகவும், தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் குடியமர்த்தப்பட்டனர்.


**Isbn Number**: 978-93-91115-46-3

மூணாங்கொடி நாவல், ஒவ்வொரு கிராமத்திலும் இருவேறு குடியிருப்புகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஒன்று உயர்சாதியினர் குடியிருக்கும் மேலத்தெரு. இன்னொன்று ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் சேரிக்குடியிருப்பு.

நாவலின் முதல் அத்தியாயம் கீழத்தெருவில் வசிக்கும் கந்துப்பிள்ளை என்ற கதாபாத்திரத்தின் வழியாகத் தொடங்குகின்றது. **இருசாயிபாளையம்** என்னும் ஊரே கீழத்தெரு என்று மாற்றம் பெற்றிருக்கிறது. இருசாயி என்பது அவ்வூரின் காவல் தெய்வமாகவும், கீழத்தெருக்காரர்கள் வணங்கும் தெய்வமாகவும் இருந்துள்ளது. இருசாயிபாளையத்தின் பெயர் மாற்றத்திற்குக் காரணம், ஊரின் இன்னொருபுறம் இருந்த மேலத்தெருக்காரர்கள்.

**'பறத்தெருவுச் சாமிபேரு' நம்மூருக்கும் இருக்கிறதான்னு சொல்லி சாதியவெச்சு**


**Isbn Number**: 978-93-91115-46-3

**ஊருப்பேரப் பிரிச்சி இருசாதிப்பாளையமா மாத்துனாங்க!. மேல்சாதிக்காரங்களெல்லாம் இருக்கற ஊருக்கு மேலப்பாளையமின்னும் பறைமூடு, சக்கிலூடு, வண்ணாமூடெல்லாம் சேர்ந்திருக்கற இந்தூருக்கு சேரித்தெருவுன்னும் வெச்சாங்க.** (மூ.கொ. பக்-4)

என்று குமுறும் கந்துப்பிள்ளையின் ஆற்றாமை நமக்கும் கோபத்தை மூட்டுகின்றது. சக மனிதர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், தங்கள் எண்ணங்களை அவர்கள்மேல் திணிப்பதற்கான காரணம், அவர்களால் எதுவும் செய்யமுடியாது என்ற அடிப்படைச் சித்தாந்தத்தை காலங்காலமாகத் தக்க வைத்திருப்பதுதான்.

மக்களாகப் பிறந்தவர்கள் ஒவ்வொரு நிலையிலும் எதிர்கொள்ள வேண்டய ஒன்றாகச் சாதிப்பாகுபாடு இருக்கிறது. அதனால் அதை எதிர்க்கும் போராட்டங்கள் கூட்டாகவோ,


**Isbn Number**: 978-93-91115-46-3

தன்னிச்சையாகவோ நடக்கின்றன. இவை அவர்கள் நடத்தப்படும் முறையால் தொடங்குகின்றன. மூணாங்கொடி நாவல் குடிக்கும் தண்ணீருக்கும், சாலை வசதிக்கும், வயல் வேலைக்கும், குப்பையள்ளும் வேலையின் சிபாரிசுக்காக கைகட்டி நிற்பதையும் நாவல் சுட்டிக்காட்டுகின்றது.

- கீழத்தெரு மக்கள் வசிக்கும் இடத்தில் ஒரு மணி நேரம் மட்டுமே தண்ணீர் வரும். தண்ணீர் தேவையென்றால் மேலத்தெருவில் இருக்கும் தண்ணீர்பைப் அருகில் காத்திருக்க வேண்டும். மேலத்தெருக்காரர்கள் யாராவது தண்ணீர் பிடித்து இவர்களின் குடங்களில் ஊற்றுவார்கள். இவர்களாகக் குடங்களில் தண்ணீர் நிரப்பக் கூடாது.
- மேல்சாதிக்காரர்களின் அனுமதியின்றி பறைத்தெருவில் இருப்பவர்கள் ஆடு,


**Isbn Number**: 978-93-91115-46-3

மாடு, கோழி போன்றவற்றை வளர்க்கக் கூடாது. அப்படி வளர்க்க விரும்பினால் மேல்சாதிக்காரர்களின் ஆடுமாடுகளை மேய்த்துக் கூலி வாங்கிக் கொள்ளலாம். வேண்டுமானால்பன்றி வளர்த்துக்கொள்ளலாம்.

- மேல் சாதிக்காரர்களின் வீடுகளில் கவுரவத்திற்காக சேரிக்காரர்களை வேலைக்கு வைத்துக்கொள்வது.
- ஒடுக்கப்பட்ட மக்கள் படிக்கக் கூடாது. அரசுப்பணிக்குச் செல்லக் கூடாது.
- குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு வசதி, மின்சாரவசதி போன்றவற்றைச் செய்து கொடுத்தால் முன்னேறி விடுவார்கள், தங்கள் தேவைக்கு, வேலைக்கு ஆள் கிடைக்கமாட்டார்கள் என்று நினைப்பது.


**Isbn Number**: 978-93-91115-46-3

- வேலை செய்யும் இடங்களில் பணிக்குத் தகுந்தார்போல் வசதியான தனி அல்லது பொது அறைகள், நாற்காலிகளும், குடிநீர் வசதிகளும் உண்டு. ஆனால் அங்கு குப்பைகளைக் கூட்டி அள்ளுகின்ற, கழிவறைகளைச் சுத்தம் செய்கின்ற பணியாளர்களுக்கு தனி இடம் இல்லை. அவர்கள் மரத்தடியிலும், அலுவலக வராண்டாக்களின் ஓரங்களிலும் அமரவைக்கப்படுதல்.
- கணினியில் விளம்பரப் படுத்தப்படும் மேட்ரிமோனியல் (Matrimonial) சாதி அடிப்படையில் இயங்குகின்றது என்பதை இந்நாவல் எடுத்துரைப்பதில் இருந்து, சாதியம் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.


**Isbn Number**: 978-93-91115-46-3

- ஒடுக்கப்பட்ட மக்கள் மாட்டுக்கறி திண்பவர்கள் முடிதிருத்தம் செய்துகொள்ள கடைகளுக்குச் சென்றாலும் கீழே உட்கார்ந்து வெட்டிக்கொள்ள வேண்டும்.

கரிசல் கதை எழுத்தாளர்களில் ஒருவராகிய பூமணியின் அஞ்ஞாடி நாவல், சாதியக்கட்டமைப்பில் உள்ள சமூக நல்லிணக்கக் களங்களையும் சுட்டிக் காட்டுகின்றது. உதாரணமாக விவசாயம், மருத்துவம், இறப்பு, குழந்தை பிறப்பு, கிராம திருவிழாக்கள் என்று பல்வேறு நிலைகளிலும் ஒருவரோடு ஒருவர் சார்ந்திருக்கும் சூழலை சுட்டிக்காட்டுகின்றார்.

**கருதறுப்புக்காகவே மேலூரிலிருந்து மேல் சாதிக்காரர்கள் வருவார்கள். கோனார்,செட்டியார், கவுண்டர்,நாயக்கர், தேவர் என்று பல சாதியும் உண்டு. வாட்ட சாட்டமான பெண்கள் தான் அதிகம்**


**Isbn Number**: 978-93-91115-46-3

**படைக் குருவிகளாகத் திரண்டு வருவார்கள். வாகான பெரிய பன்னரிவாளால் கொஞ்ச நேரத்தில் தட்டைகளை அறுத்துச் சாய்த்து விடுவார்கள்," "ரெம்பக் குனியாமல் நெடுங்கணை மம்பட்டியால் சோளக்கட்டை வெட்டுவதற்கு அவர்கள்தான் லாயக்கு. சும்மா சொல்லக் கூடாது. அவர்களுக்குக் கொடுக்கும் தச கூலி செமிக்கும்.** (அஞ்ஞாடி,ப.59) எனும் பதிவு விவசாயக் கூலிகளாக இருப்பவர்கள் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. பொருளாதாரத்தில் பின் தங்கிய பிற சாதியினரும், கூலி வேலை செய்து பிழைக்கவேண்டிய கட்டாயத்தினை அஞ்ஞாடி நாவல் உணர்த்துகின்றது.

சாதி ஒழிப்புப் போராட்டங்களையும், போராளிகளையும் தொகுப்பதில் ஆர்வம் செழுத்திவந்த ஸ்டாலின் ராஜாங்கம் அவர்கள்


**Isbn Number**: 978-93-91115-46-3

குளத்தில் இறங்கி நீரெடுத்த வஞ்சி நகரம் கந்தன் பற்றி தொகுத்துள்ளார்.

**தெருவில் செருப்பணிந்து நடத்தல், குடிநீர் பெறுவதில் சமத்துவம், இழிதொழில்களைக் கைவிடல், பண்ணையடிமைத் தொழிலை மறுத்தல் போன்றவற்றுக்காகப் போராடியதால் கொல்லப்பட்டார் வஞ்சிநகரம் கந்தன். இக்கோரிக்கைகள் இம்மக்களின் தேவைகளிலிருந்தும், விருப்பத்திலிருந்தும் பிறந்ததாகும். வஞ்சி நகரம் கந்தன் பெரும் படிப்பாளியோ, இயக்கப் பின்னணி கொண்டவரோ அல்ல. 8ஆம் வகுப்பு வரை படித்துவிட்டுக் கிராமப்புறத்தில் சராசரி மனிதராக வாழ்ந்தவர்** (ப.11. வஞ்.க). இந்தத் தகவல்களை ஆராயும்பொழுது ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டக்குணம் அவர்களின் எதிர்கால விடுதலைக்கான நெடும்பயணம் என்பதை


**Isbn Number**: 978-93-91115-46-3

அறிந்துகொள்ள முடிகிறது. இழிவு சார்ந்த வாழ்வுமுறையை எதிர்த்தல், தீண்டாமையற்ற சமூகம், சாதிபேதமற்ற வாழ்க்கை, தங்கள் சமுதாயத்தின் வளர்ச்சி குறித்த புதிய கருத்துக்கள் ஆகியவற்றையேக் கொண்டுள்ளனர்.

ஒடுக்கப்பட்ட மக்களின் மீது ஏவப்படும் சாதியக் கட்டுப்பாடுகள் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. சாதி ஒழிப்புப் போராட்டங்களையும், போராளிகளையும் தொகுத்துவந்த ஸ்டாலின் இராஜாங்கம் அவர்கள், மேலூர் வஞ்சிநகரம் பகுதியில் நடந்த சாதிக்கட்டுப்பாட்டு அடக்குமுறைகளை விவரித்துள்ளார். இப்பகுதியில் குடிகள்ளர்முறை பின்பற்றப்பட்டது. இப்பகுதியில் வாழ்ந்த தலித்மக்கள் நிலமற்றவர்கள்.அதானால் கள்ளர்களின் வீடுகளிலும், காடுகளிலும் பணியாளர்களாக இருந்தனர். இதற்கு குடிகள்ளர்


**Isbn Number**: 978-93-91115-46-3

முறை என்று பெயர். அதாவது ஒவ்வொரு கள்ளர் குடும்பமும் ஒரு தலித் குடும்பத்தை சொந்தமாக்கிக்கொள்ளும். அவர்களின் தேவையை அக்கள்ளர் குடும்பமே பார்த்துக்கொள்ளும். ஊரார் மத்தியில் அந்ததலித் குடும்பத்திற்கு ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அக்கள்ளர் குடும்பம் தலையிட்டுத் தீர்த்து வைக்கும். அக்குடிகள்ளரிடம் முதலில் முறையிடப்படும்.

**இக்குடிகள்ளர் அடிமைமுறை தொடர்ந்து அம்மக்களை அடிமைப்படுத்த முடிந்ததே தவிர பொது உரிமைகளை அளிக்கவில்லை. .....**

**பொதுக்கோவிலில் திருவிழாவில் சமமாகப் பங்கேற்கமுடியாது. முழங்கால்வரை வேட்டியணியத்தடை. இதனை மீறும் வஞ்சிநகர மக்கள் ஊர்ப்பொதுக் கோயில் கம்பத்தில் கட்டிவைத்து அடிக்கப்படுவார்கள். அவர்களின்**


**Isbn Number**: 978-93-91115-46-3

**குடும்பப் பெரியவர்கள் ஊரார் முன்னிலையில் கும்பிட்டு விழவேண்டும்.”** (ப.19. வஞ்.க)

பிறர் நலமாக வாழ்வதற்காகவும், உரிமைகளைப் பெறுவதற்காகவும் போராடுபவர்கள் அனைவரும் தியாகிகள்தான். அந்தவகையில் தீண்டாமை நடைமுறைகளை எதிர்த்துத், தன் இன மக்களுக்காகப் போராடித், தனது உயிரைத் தந்ததவர் தான் கந்தன் என்கின்ற கந்தசாமி. இன்றும் தன் இன மக்களால் வீரனாக, தியாகியாக அம்மக்களால் போற்றப்படுகிறார்.

மூணாங்கொடி நாவலில் வேல்முருகன் என்ற ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த கல்லூரி மாணவன் உயர்சாதி சமுதாய இளைஞர்களால் அடிக்கப்பட்டு நினைவிழக்கின்றான். அதற்காக அந்தச் சேரிப்பகுதியில் வசிப்பவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் நியாயம் கேட்கின்றனர். அதன் பலன் கால்துறையினரின் அடியும் உதையும்.


**Isbn Number**: 978-93-91115-46-3

காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் வைக்கப்படுகின்றனர். காவல்துறை அதிகாரி ஒருவர் கஞ்சா வைத்திருந்ததாக பொய்க்கேசு போடுவேன் என்று மிரட்டுகிறார். அதற்கு அம்மக்கள் **கெழக்க பத்தேக்ரா மேக்க பத்தேக்கரான்னு காடுகரையும் தோட்டந்தொறவும் கணக்கத்துக் கெடக்குது காருங்க. அதுல கஞசாவ வெளைய வெக்கறதுக்கு? அடுத்த வேள சோத்துக்கு என்னடா பன்னலான்னு யோசிக்கற சாதில பொறந்திருக்கறம்! எங்குமேல என்னென்ன கேசு இருக்குதோ அத்தனையவும் போடுங்க? ஊருசனமெல்லாம் ஜெயில்ல போயாவது கொஞ்ச நாளைக்கி நிம்மதியா இருக்கறம்!** (மூ.கொடி.ப.32) என்று தங்களுக்கு உதவ யாருமற்ற கையாலாகத்தனத்தை நினைத்து வருந்துகின்றனர். கையகல சொந்த நிலம் இல்லாத இயலாமையை அவர்களின் வார்த்தை வெளிப்படுத்துகின்றது.


**Isbn Number**: 978-93-91115-46-3

கல்வியும் வேலை வாய்ப்பும் அவர்களை உயர்த்தும் என்ற நம்பிக்கைகள் இன்று பொய்த்துப் போகவில்லை. அடக்குமுறை அடிமைத்தனத்தை எழுச்சியுறச் செய்யும் என்பதில் எவ்விதமான அய்யமும் இல்லை. மூணாங்கொடி நாவலில் வரும் மாணவர்களும் கல்வியே சிறந்த வழி என்பதை உணர்ந்திருக்கின்றனர்.

**நாமெல்லாம் படிச்சு பெரிய வேலைக்கிப்போயி கல்யாணங்கட்டி னம்மு புள்ளைக்கிளுக்கு கந்தனும் குப்பனும் ராமன்னும் பேரு வெக்கக்குடாது! நம்மாளுகள மாரியாதையா கூப்புடுறமாதிரி வைக்கோணும்** (மூ.கொடி. ப.49)

என்று உலகம் தெரியாத பிள்ளைகளின் மனதில் உலகலாவிய பக்குவத்தைக் காண முடிகிறது.

**2. கல்வி பயிலும் இடம் அல்லது வேலை பார்க்கும் இடத்தில் ஏற்படும் சிக்கல்கள்**


**Isbn Number**: 978-93-91115-46-3

பிறப்பு முதல் இறப்புவரையிலான இடைப்பட்ட காலத்தில் வாழ்வாதாரத்திற்கு சாதியமே அடிப்படையாக இருக்கிறது. உணவு, உடை, இருப்பிடம் மட்டுமே அடிப்படைத் தேவையாக இருந்தது. ஆனால் இன்றைய வாழ்வியல் முறைக்கு சாதி என்பதும் அடிப்படையாக இருக்கிறது. பிறப்பு, வாழிடம், கல்வி, பொருளாதார உதவி, வேலை வாய்ப்பு என்று அனைத்திலும் சாதிகள் மறு உறுதி செய்யப்படுகின்றன.

மூணாங்கொடி நாவலில் வீதி கூட்டும் வேலை செய்யும் குப்புசாமியின் மகன் வேல்முருகன் கல்லூரி மாணவன். அவன் கல்லூரிக்கு முதல் நாள் சொல்லும் பொழுது, **கூடப்படிக்கிற பசங்களோட அண்ணன் தம்பியாப் பழகு” என்று அறிவுரை சொல்கிறார். அதற்கு அவரது மகன் எங்கப்பா நீ சொல்ற மாதிரி பசங்க கூடப் பேசப்போனாலே**


**Isbn Number**: 978-93-91115-46-3

**முகத்த இழுத்துக்கிட்டு பேசாமா போறவனுககிட்ட என்னன்னு பேசறது. செத்துப்போயிட்டா என்னத்த வாரிட்டுப் போறப்போறமின்னு யாரும் நெனச்சுப் பார்க்குறதில்லை** (மூ.கொ. ப.26) என்று இளவயது மாணவனின் வருத்தத்தை உணரமுடிகிறது. எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையில். ஆனால் சாதியத்தையும் மதத்தையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் இந்த உலகம் பிஞ்சுகளின் மனதில் சாதி என்னும் நச்சு விதையை வளர்த்து விட்டிருப்பதால் அது வாழையடி வாழையாக வளர்ந்து வருகிறது.

**வஞ்சிநகரத்துக் கந்தன் என்கின்ற கந்தசாமி மதுரை அழகர்கோவில் அருகிலுள்ள மொட்டாம்பாறை கல்குவாரியை சப்-காண்ட்ராக்டர் எடுத்தனர். தலித்தொருவர் கான்ட்ராக்ட் எடுத்தது இப்பகுதியில் இதுவே முதல்முறை** (ப.19. வஞ..க)


**Isbn Number**: 978-93-91115-46-3

பொருளாதாரமும், துணிச்சலும் சாதி இந்துக்களிடம் இருந்து அவர்களை விடுபடவைத்துள்ளது.

சாதியம் பார்ப்பதும் தீண்டாமையே என்று சாடி என்னற்ற கவிஞர்கள் கவிதை இலக்கியம் படைத்துள்ளனர். கவிஞர் ஏகாதசி பல கவிதை நூல்களைப் படைத்தவர் தனது **ஹைக்கூ தோப்பு** எனும் கவிதைத் தொகுப்பில் சாதியக்கொடுமைகளை கவிதைகளில் வடித்துள்ளார். ஒவ்வொருவரின் உரிமைக்காகவும் அனைவரும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஒரு சமுதாயத்தில் உள்ள அனைவரும் ஒற்றுமை, கடமை, வளர்ச்சி, பாதுகாப்பு என்று அனைத்திலும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்கிறார்.

**நாங்கள்**

**தாழ்த்தப்பட்டவர் என்று**

**சில சாதிகளால்**


**Isbn Number**: 978-93-91115-46-3

**சமாதிகளை**

**கட்டிக்கொண்டோம்** (ஹை.தோப்பு.ப.50)

என்று இன்றைய சமுதாயத்தில் நிகழும் சாதிக்கொடுமைகளை முன்வைக்கிறார். தீண்டாமைக்கு குரல் கொடுத்ததோடு மட்டுமின்றி அதற்கானப் போராட்டத்தையும் தொடங்கியவர் பெரியார்.

**ஒரு வெட்டியான்**

**தீண்டிப் போனாலும்**

**பூ தீட்டு கழிக்க**

**குளிப்பதில்லை**

**பூ தான்**

**பெரியார்** (ஹை.தோப்பு. ப.28)

என்று பெரியாரின் சமுதாயச்சிந்தனையைக் குறிப்பிடுகிறார். காலத்தின் மாற்றத்திற்கேற்ப சாதிக்கொடுமையும் தீண்டாமையும் மாற்றம் பெற்றிருக்கிறது. கிராமத்தில் வெளிப்படையாகக்


**Isbn Number**: 978-93-91115-46-3

காட்டப்படும் தீண்டாமை நகரத்தில் நவீனமாக்கப்படுகிறது. மூணாங்கொடி நாவலில் வரும் கௌதமன் படித்து துணை ஆட்சியர் பணிக்குத் தேர்வாகி தன் தாயுடன் நகரத்தில் குடியேறுகிறார். ஆனால் அங்கும் சாதி பார்த்து பழகுவதை கண்டு கௌதமனின் தாயார் குமுறுகிறார்.

**பட்டிக்கதட்டுலதான் சாதிவெறி புடுச்சுத் திறியறாங்கன்னா டவுன்ல அதுக்குமேல இருக்குது! படிச்சவங்கலாம் வாசம் பன்ற எடம் வேற! படிச்சவங்கதான் இதக் கட்டிக்காத்துக்கிட்டு வர்றது வெளிப்படையாத் தெரியுது!** (மூ.கொடி.ப.81)

என்ற வரிகள் ஒரு தாயின் குமுறல் மட்டுமல்ல ஒரு சமூகத்தின் அரு வேறு முகங்களை வெளிப்படுத்துவதாக உள்ளது.

படித்து நல்ல வேலை பார்க்கும் ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்கு பணியிடங்களில் உள்ள சாதிய


**Isbn Number**: 978-93-91115-46-3

அடக்குமுறைகளையும் நாவலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். பல வருடங்களாக நாமக்கல் மருத்துவமனைக்கு பெரிய டாக்டர் இல்லாமல் இருந்து வந்துள்ளது. அங்கு பணிமூப்பு அடிப்படையில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அதிகம் இருந்ததால் மருத்துவர் நியமிக்கப்படாமல் இருந்துள்ளது. ஒருகட்டத்தில் அனைத்துத் தடைகளையும் மீறி நாமக்கல் ஆஸ்பத்திரிக்கு மருத்துவர் நியமிக்கப்படுகிறார். ஆனால் அங்கு அவர் சக பணியாளர்களால் அவமதிக்கப்படுகிறார்.

**நாமக்கல் ஆஸ்பத்திரிக்கு பொள்ளாச்சிக்குப் பக்கத்தில் இருக்கிற பூப்பருத்திங்கற ஊரச்சேர்ந்த ருத்திரமூர்த்தி டாக்டர பெரிய டாக்டரா நியமிச்சது! டாக்டரோட கைராசி எப்படி தெரியுமா! நோயாளிககிட்ட பேசுனாவே நோவு நெல்லாப் போகுது! அதனால அவர கைராசியான**


**Isbn Number**: 978-93-91115-46-3

**டாக்டருன்னு சொன்னாங்க! ஆனா ஆஸ்பத்திரி வட்டாரத்துல அவர குப்ப டாக்கர்ன்னுதான் எல்லாருமே சொல்றாங்க! ஊன்னா ! டாக்டரோட அம்மா நாமக்கல் ஆஸ்பத்திரில கூட்டற வேலை செஞ்சு படிக்க வெச்சாங்களாம்! அதனால அந்தப்பேரு** (மூ.கொடி.ப.15)

என்று ருத்ரமூர்த்தி டாக்டர் குப்படாக்டர் என்று அழைக்கப்பட்டு அவரது சேவையின் மேன்மை மறைக்கப்படுகிறது. பிறப்பொக்கும் எல்லா உயர்க்கும் என்ற வள்ளுவனின் வார்த்தை பொய்யாக்கப்படுகிறது. பிறப்பால் ஒருவர் தாழ்ச்சியடைவதில்லை பிறருக்கு அவர் செய்யும் சேவைகள் அவரின் சிறப்பை வெளிப்படுத்தும் என்பதற்கு மருத்துவர் ருத்ரமூர்த்தி போன்றவர்கள் உதாரணமாகும்.

**3. பழமைவாதம் மாறாமல் பார்த்துக்கொள்வது**

கவிஞர் மு.மேத்தா அவர்களின் கண்ணீர்


**Isbn Number**: 978-93-91115-46-3

பூக்கள் கவிதைத் தொகுப்பில் செருப்புடன் ஒரு பேட்டி என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் சாதிய முரண்பாட்டினையும், தாழ்த்தப்பட்ட மக்கள் செருப்புக்கு இணையாக அவமரியாதை செய்யப்படுவதையும் மூணாங்கொடி நாவலில் உணர்த்துகின்றார்.

**காலடியில் மிதிபட்டு காலமெல்லாம்**
**உழைத்தாழும்**
**வாசலில் மட்டுமே வாசம் பிடிக்கிறோம்…**
**உழைப்பதற்காகவே விலைக்கு வாங்கப்படும்**
**அடிமைகள் நாங்கள்** (க.பூக். ப. 72 )

ஒடுக்கப்பட்டோர் மீதான அடக்குமுறை, நகரம் முதல் கிராமம் வரை தினமும் நேரடியாகவும், மறைமுகமாகவும் நடைபெற்று வருகிறது. சாதியத்தின் பெயரால் காலங்காலமாகத் தங்கள் மீது திணிக்கப்படும் கொடுமைகளை ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்தே வந்துள்ளனர்.


**Isbn Number**: 978-93-91115-46-3

பிறக்கும் குழந்தைக்கு தீட்டு கழிப்பது, பிரசவம் பார்ப்பது, இறப்புச்சடங்கு செய்வது, ஊரைச் சுத்தம் செய்வது என்று ஒவ்வொரு காரியத்திற்கும், ஒடுக்கப்பட்ட சமூகமக்களின் உதவி பிறருக்குத் தேவைப்படுவதை இந்நாவல் உணர்த்துகிறது. இந்நாவலில் கிராமத்தின் முன்சீப்பாக இருக்கக் கூடிய வினைதீர்த்த முதலியின் தந்தை பெருக்கப்பமுதலி இறந்து விடுகிறார். இறப்பவருக்கு ஈமச்சடங்கு செய்வதற்கு பெருக்கப்பமுதலியின் மகன் வினைதீர்த்தமுதலி சேரிக்காரர்களை முறைசெய்ய அழைக்கிறார்.

**டே குப்புசாமி! இது உங்களோ தோட்டுதான ஏன்டா அந்த வழக்க முறைய மாத்தறீங்க. பொணத்துக்கு செய்ய வேண்டியத வந்து செஞ்சுகுடுத்துட்டு போடா. பொணத்த எரிச்சு சாம்பலக் குடுக்குற வரைக்கும் எல்லா காரியத்தையும் நீங்கதான் செய்யிணும்!**


**Isbn Number**: 978-93-91115-46-3

**அதவுட்டுட்டு பொணத்த எடுக்கமாட்டம் புடிக்க மாட்டன்னா எவன்டா வந்து இதையெல்லாம் செய்வாய்ங்க?** (மூ.கொ. பக்4). என்று சேரிமக்கள் தங்கள் வழக்கத்தை மாற்றிக்கொள்ளக் கூடாது என்று கட்டளையிடுகிறார். இழவு வீட்டில், அழுவதற்கு ஆள் இல்லாதால், அங்கிருக்கும் பெண்கள் சிலரை மாராடித்து அழுவதற்கு, கூலி தருவதாகக் முன்சீப் வினைசீர்த்தமுதலி அழைக்கிறார். இது ஆண்டாண்டு காலமாக செய்து வந்த வேலையின் அடிமைத்தனத்தைக் காட்டுகிறது.

வஞ்சிநகரக் கந்தன் வரலாற்றிலும், வஞ்சிநகரத்தில் வாழ்ந்த மக்களும் **இழவு.ஜல்லிக்கட்டு, கோவில் திருவிழா போன்றவற்றிலும் இம்மக்கள் தப்பு அடிக்கவேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டனர். அரிச்சந்திர நாடகத்தின் ஒருபகுதியாக ஒற்றை முலைக்குறத்தி நடனம்** எனக்கூறி தலித் மக்களை


**Isbn Number**: 978-93-91115-46-3

இழிவுபடுத்தப்பட்டதையும் (ப.21.வஞ்.க) அறிய முடிகிறது. சுடுகாடு எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் பெரும்பாலான கிராமங்களில் இரண்டு சுடுகாடுகள் பயன்படுத்தப்படுவதை அறியமுடியும். மூணாங்கொடி நாவலும் உயர்சாதியினருக்கான சுடுகாடும், ஒடுக்கப்பட்டோர்க்கான சுடுகாடும் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

தந்தையின் இறப்பு நிகழ்வை நடத்தி முடிக்க முன்சீப் வினைதீர்த்த முதலி மிகுந்த சிரமம் கொண்டார். அப்பொழுதுதான் பறையர் மக்களின் தேவையைப் புரிந்து கொண்டார். கவுரவத்திற்காக அம்மக்கள் தன் வீட்டில் வேலை செய்யவேண்டும் என்று விரும்பினார். அம்மக்கள் யாரும் பள்ளிக்குப் போகக்கூடாது என்றும், அரசுப்பணிக்குச் செல்லக் கூடாது என்பதில் உறுதியாக இருந்துள்ளார். அப்படியே அரசாங்கப்பணியில் சேர்ந்தாலும்


**Isbn Number**: 978-93-91115-46-3

தனக்குச் சமமாக இருக்கக்கூடாது என்பதில் உறுதியுடன் இருந்தார்.

### 4. பாலியல் துன்புறுத்தல்கள்

பெண்கள் மீதான பாகுபாடு, சித்ரவதை, அடக்குமுறை, பாலியல் வன்கொடுமை போன்ற கொடுமைகள் சாதி, மதம் பாராமல் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. பெண்கள் பிரச்சனை என்பதால் அனைவரும் சேர்ந்தே போராடவேண்டி இருக்கிறது. பணியிடங்கள், கல்வி பயிலும் இடங்கள், தனியாக வாழக்கூடிய சூழலில் உள்ள பெண்கள், சிறுமியர் என்ற பாகுபாடு இன்றி அனைத்துப் பெண்களுக்கும் பல வடிவங்களில் இத்தொல்லைகள் தொடர்கின்றன. தொட்டுப்பேசுதல், தனிமையில் இருக்க அழைத்தல், பெண்கள் உதவி கேட்டால் பாலியல் துன்புறுத்தல்கள் தருதல், தனிமையில் இருக்கும் பெண்கள் என்றால் எளிதில் அனுக முடியும் என்று


**Isbn Number**: 978-93-91115-46-3

நினைத்தல் காலம் காலமாக நடந்து கொண்டிருக்கும் ஒரு அவமானகரமான செயலாகும். மூணாங்கொடி நாவலும் தேவி என்கிற பெண்ணுக்கு நேர்ந்த அவலங்களைக் வெளிப்படுத்துகிறது. இந்நாவலில் வரும் வினைதீர்த்தான் முன்சீப்பின் தம்பி கைலாசத்தின் மகன் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச்சார்ந்த தேவி என்கிற பெண்ணைப்பற்றி தவறான வதந்திகளை விதைக்கின்றான். இதனால் அவளைப் பெண்பாற்க வருபவர்கள் அவள்மீது போடப்பட்ட பழியை உண்மை என்று எண்ணி திருமணம் செய்யமறுக்கிறார்கள். அவமானத்தினால் வெளியில் நடமாடுவதைத் தவிர்க்கிறாள். அவள் மட்டுமன்று அவளைப்போன்ற காலனியைச் சார்ந்த பிற பெண்களின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகிறது. அதனைத் தட்டிக்கேட்பதற்காக தேவியின் தந்தையும்


**Isbn Number**: 978-93-91115-46-3

காலனிக்காரர்களும் கைலாசத்திடம் கேட்பதற்காகச் செல்கிறார்கள்.

**என்பையன் தப்புப் பண்ணிட்டாங்கறதுக்காக காலனிக்காரிய மருமகளாக்கிக்க முடியுமா? அமைதியாகப் போய்டீங்கன்னா செரி போயிட்டுப் போகுதுன்னு உட்டுறுவன். பிரச்சனையேதும் பண்ணுனீங்கனா உங்கு புள்ள காலேஜ் பசங்களோட தகாத முறையில நடந்துட்டானு நோட்டீஸ் அடிச்சு ஒட்டிருவன்! இதையும் மீறிப் பிரச்சனை பண்ணுணீங்கனா ஊரையே தீவச்சுக் கொளுத்திப்போடுவேன். சாமானியத்துல அடங்க மாட்டீங்களாட்டம் இருக்குது. நீங்களா நானான்னு பாத்துக்க வேண்டீதுதான்?.**(மூ.கொடி. ப. 13)

என்று சவால் விடும் கைலாசத்திற்கு தனது மேலாதிக்க சமூகம் தனக்கு எந்த வகையிலும் உதவும் என்ற மன வெளிப்பாட்டின் அடிப்படையில் இருந்து தோன்றியதாகும். கைலாசம் எனும்


**Isbn Number**: 978-93-91115-46-3

கதாபாத்திரத்தின் இந்த குரல் ஒட்டு மொத்த மேலாதிக்க சமூகத்தின் குரலாகவே ஒளிக்கிறது.

சீர்திருத்த திருமணத்தையும் தன் நாவலில் சொல்லிச்செல்கிறார் நாவலாசிரியர். இந்நாவலில் வரும் முன்சீப் வினைதீர்த்தானின் அக்காள் கணவர் ஆசிரியர் அருட்பிரகாசம். முற்போக்குவாதி. அவரோடு சக ஆசிரியராக பணியாற்றுபவர் செல்வராஜ். ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். செல்வராஜ் வாத்தியாரின் மகள் பிருந்தாவும் அருட்பிரகாசம் ஆசிரியரின் மகன் குணசீலனும் விரும்பினர். பல எதிர்ப்புகளுக்கிடையே இருவரின் திருமணமும் நடைபெறுகிறது. இது சமுதாயத்தில் ஏதேனும் ஓர் இடத்தில் நடைபெறும் சமூக மாற்றத்தைக் குறிக்கிறது. அனைத்து இடங்களிலும், அனைத்து காலகட்டங்களிலும் இவை நடந்தால் சமூக மாற்றம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.


**Isbn Number**: 978-93-91115-46-3

**நிறைவாக**

தீண்டாமையிலிருந்து விடுதலை என்பதே ஒடுக்கப்பட்ட மக்களின் நீண்டகால முழக்கமாக இருந்து வருகிறது. சமூக உறவுகளிலிருந்து விலக்கப்பட்ட அவலத்தை துடைத்தெரிவதே அம்மக்களின் நோக்கம். எல்லோரும் ஓர் இனம் என்ற மன வளமையை ஏற்படுத்தினால் பலகாலம் மனித இனம் நிம்மதியாக பூமியில் வாழ்வதற்கு வழிபிறக்கும். மூணாங்கொடி நாவல்கள் இந்தியச் சமூகத்தில் வேரூன்றியிருக்கும் சாதிய முகத்தின் ஒரு பகுதியைக் காட்டுகிறது.

**முதன்மை நூல்**

[1] ரகுதேவன். மூணாங்கொடி, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை – 600014, 2014.

[2] அன்புசெல்வம். *கொடுமை முறியும்*, கலகம், 1, அப்பாவு கிராமணி தெரு, சென்னை. 600002, 2004.


**Isbn Number**: 978-93-91115-46-3

[3] குணசேகரன்.கே.ஏ. *தலித் கலை கலாச்சாரம்,* அகமது வணிக வளாகம், சென்னை - 600014, 1999.

[4] கவிஞர் ஏகாதசி, *ஹைக்கூத் தோப்பூ,* தாய் வெளியீடு, சென்னை – 600 026.

[5] கவிஞர் மு.மேத்தா. *கண்ணீர்ப் பூக்கள்,* பனுவல், 2015.

[6] ரவிக்குமார் (தொகுப்பாசிரியர்). *தலித் என்ற தனித்துவம்,* தலித் கலைவிழாக் குழு, நெய்வேலி-1, 1996.

[7] ஸ்டாலின் இராஜாங்கம். *வஞ்சிநகரம் கந்தன்,* அம்பேத்கர் தெரு, பெரிய ஊர்ச்சேரி, மதுரை - 625502, 2008.



**Isbn Number**: 978-93-91115-46-3

# Human Relationships in the Novel *Aahayam Kaanaatha Natchathiram* (A Star that did not see the Sky)

**Dr M. Murali,** Assistant Professor, Department of Tamil, Kamaraj college, Thoothukudi – 628003, TamilNadu, India.
**Email id:** muralidev1980@gmail.com
ORCiD: **https://orcid.org/0000-0002-0357-5315**
**DOI: 10.5281/zenodo.5520556**

## Abstract

*Indira Soundararajan is a progressive writer who seeks to make man human. He is good at describing human emotions and the supernatural events that arise within man. Indira Soundararajan has written novels, essays, television series, screenplays and short stories focusing on the state of human emotions in society. The purpose of this article is to study human relations in the social novel A Star which did not see the sky. Love is considered to be the language of a soul. It is a good relationship to the end that relationships do not expect any response. The love between a daughter and mother, the love of the son- mother, the love of the grandmother-granddaughter, the relationship of the mother-in-law, the love of the step-mother, the charity and self-respect of an elderly mother are extensively explored in the*


**Isbn Number**: 978-93-91115-46-3

*novel Star, which does not see the sky. The summary of the study is to create awareness about human relations for today's generation.*

**Keywords:** Relationships, Love, Grandmother, Granddaughter, Mother-in-Law, Daughter-in-Law, Stepmother, Daughter, Mother, Son, Self-Respect, Charity.

## References

[1] Indira Soundararajan. Aagayam Kaanatha Nakshatram, Thirumagal Nilayam, Chennai, First Edition, 2002.

[2] Charles. A. Vellum Uravugal, Saradha Publication, Chennai, First Edition, 2000.

[3] Murthy. Sa. Uravugal Kattukkoppanathu, Narmada Publication, Chennai, First Edition, 2000.

[4] Rao B. S. Manathil Maraidtha sakthi, Narmada Publication, Chennai, First Edition, 2003.

[5] Janetlur. Elimaiyana anbu, Manora Publication, Chennai. Reprint, 2010.



**Isbn Number**: 978-93-91115-46-3

# ஆகாயம் காணாத நட்சத்திரம் என்னும் நாவலில் மனித உறவுகள்

**முனைவர் மா. முரளி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி – 628003, தமிழ்நாடு, இந்தியா.
**Email id:** muralidev1980@gmail.com
**ORCiD**: **https://orcid.org/0000-0002-0357-5315**
**DOI: 10.5281/zenodo.5520556**

## ஆய்வுச்சுருக்கம்

மனிதனை மனிதனாக்க முற்படும் முற்போக்கு எழுத்தாளர் இந்திரா சௌந்தரராஜன். மனித உணர்வுகளையும் மனிதனுக்குள் தோன்றும் அமானுஷ்ய நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுவதில் வல்லவர் இவர். இந்திரா சௌந்தரராஜன் சமுதாயத்தில் நிலவும் மனிதர்களுடைய உணர்வுகளின் நிலையினை மையமாக வைத்து நாவல்கள், கட்டுரைகள், தொலைக்காட்சித் தொடர்கள், திரைக்கதைகள், சிறுகதைகள் போன்றவற்றை எழுதியுள்ளார். அவற்றுள் ஆகாயம் காணாத நட்சத்திரம் என்ற சமூக நாவலில் மனித


**Isbn Number**: 978-93-91115-46-3

உறவுகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் எனலாம். அன்பு என்பது ஒரு ஆன்மாவின் மொழியாக கருதப்படுகின்றது. உறவுகள் எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காது இருப்பது இறுதிவரை நல்ல உறவாக அமைந்திருக்கும். ஒரு மகள் - தாய்க்கும் இடையேயான அன்பும், மகன் - தாய் அன்பும், பாட்டி - பேத்தி அன்பும், மாமியார் - மருமகள் உறவு முறையும், மாற்றான் தாயின் அன்பும், ஒரு வயதான தாயின் அறப்போராட்டமும், சுயமரியாதையும் ஆகாயம் காணாத நட்சத்திரம் என்னும் நாவலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இன்றைய தலைமுறையினருக்கு மனித உறவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஆய்வுச்சுருக்கமாகும்.

**கலைச்சொற்கள்:** உறவுகள், அன்பு, பாட்டி, பேத்தி, மாமியார், மருமகள், மாற்றான் தாய், மகள், தாய், மகன், சுயமரியாதை, அறப்போராட்டம்.


**Isbn Number**: 978-93-91115-46-3

## முன்னுரை

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை போன்று வளர்ந்து வரும் தற்கால இலக்கியங்களை ஆராயும் போது அவற்றுள் ஒன்றான நாவல் கலைச்சொல்லோவியமாகத் திகழ்கிறது. இந்நாவல்கள் மனிதனின் வாழ்க்கையைச் சித்தரிப்பதுடன் எண்ணற்ற சமுதாயப் பிரச்சினைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கற்பனைமெருகூட்டி, சுவையான, இனிய, எளிய சொற்களில் தமக்குரிய உத்திகளை இணைத்து வெளிப்படுத்துவது கதைகளாகும். இவ்வாய்வு மனிதனுடைய உணர்வுகளை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. மனித மனதிற்குள் எழும் எண்ணங்களை வெளிப்படுத்தும் உணர்வுகளின் சிறப்பை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.


**Isbn Number**: 978-93-91115-46-3

**உறவு – விளக்கம்**

உறவு என்பது பிறருடைய ஆதரவின்கீழ் வாழ்ந்து வருவது அல்ல. தனிமை என்ற சிறையிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள நாம் ஒருவரைச் சார்ந்திருப்பதும் உறவு ஆகிவிடாது. சௌகரியங்களை எதிர்பார்த்து உறவு மற்றவர்களிடம் நாம் பழகி வருவதும் உறவு அல்ல. இன்பத்தினை எதிர்பாத்து மற்றவர்களுடைய சேர்க்கையை நாம் நாடுவதும் உறவு அல்ல.

**உறவு என்பது புனிதமானது . இதில் சுயநலத்தின் கலவை சிறிதும் கூட இருக்கக்கூடாது (ச. மூர்த்தி, உறவுகள் கட்டுக்கோப்பானது, ப. 4)** என்று அறிஞர் மூர்த்தி அவர்கள் தமது கட்டுரையில் கூறியுள்ளார்.

**சுயநலம் சிறிதும் இல்லாத பரிசுத்தமான உறவை ஏற்படுத்திக் கொள்ளும் போது வாழ்க்கை அழகு நிறைந்ததாக மாறிவிடும். (மேலது , ப. 6)**


**Isbn Number**: 978-93-91115-46-3

என்று அறிஞர் கிருஷ்ணர் கூறியுள்ளார். எந்த எதிர்பார்ப்பையும், பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் அமைந்திருக்கும் உறவு வெறும் மனிதர்களை மட்டும் தழுவிய உறவாக இருக்காது. அது இயற்கை முழுவதையும் தழுவிய உறவாக இருக்கும். மேற்கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொண்ட நம்மால் மலர்கள், கொடிகள், கனிகள், பிரபஞ்சம் அனைத்துடனும் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டு வாழ இயலும்.

உலகம் என்பது உறவைக் கொண்டுதான் உருவாக்கப்பட்டுள்ளது. உறவின் பயணம்தான் வாழ்க்கையாக உருவெடுக்கின்றது. நமக்கும், வேறோருவருக்கும் இடையே இருந்து வரும் உறவு, நமக்கும் நமது குடும்பத்தைச் சேர்ந்தவருக்கும் இடையே இருந்து வரும் உறவு, நமக்கும், நமது சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே இருந்து வரும் உறவு ஆகியவற்றைப் பொறுத்துதான்


**Isbn Number**: 978-93-91115-46-3

நம்முடைய சிந்தனைகளும், எண்ணங்களும், செய்கைகளும் அமைகின்றன.

**உறவை உருவாக்கும் முறை**

நல்ல உறவை உருவாக்கிக் கொள்வதற்கு நாம் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பொறுமை, ஆர்வம், ஊக்கம், விடாமுயற்சி போன்றவை நல்ல உறவை உருவாக்குவதற்கான அவசியத் தேவைகளாகும். மனதிலும், வெளியிலும் எளிமையைக் கடைப்பிடித்து வருபவர்களால்தான் அனைவரிடமும் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

**போதும் என்ற மனத்திருப்தியை வளர்த்துக் கொண்டவர்களால்தான், தங்களிடம் இருப்பவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு, மற்றவர்களையும் சந்தோஷப்படுத்தி, தாங்களும் சந்தோஷமாக வாழ்ந்து வர முடியும் (பி.எஸ்.ராவ் , மனதில் மறைந்த சக்தி, 1.24)**


**Isbn Number**: 978-93-91115-46-3

என்ற கருத்தினை பி.எஸ்.ராவ் கூறியுள்ளார். ஒரு காரியத்தைச் செய்யத் துவங்குவதற்கு முன் நமக்கு என்ன ஆதாயம் கிடைக்கும் என்ற சுயநோக்கத்தோடு பார்க்காமல், சமூகத்திற்கு என்ன பயன் கிடைக்கும் என்று சிந்தித்துப் பார்ப்பவர்களாக நாம் இருக்க வேண்டும் . மனதிருப்தியைக் கொண்ட நம்மால் நல்ல குணங்களைப் பெற முடியும். நல்ல குணத்தைப் பெற்றால் மற்றவர்களிடம் சுலபமாக நல உறவை நம்மால் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

**அன்பு - ஆன்மாவின் மொழி**

மனித உறவுகள் மாண்புமிக்கவை. தனித்துவம் வாய்ந்தவை. வெறும் உணர்ச்சிகளின் இச்சைகளில் வீழ்ந்து விடாமல் உணர்வுப் பூர்வமாகப் புரிதலும், ஏற்றுக்கொள்ளுதலும், அன்பு செலுத்துவதும், உய்த்துணர்வதும் மக்களாகிய நம்மால் மட்டும் தான் முடியும்.


**Isbn Number**: 978-93-91115-46-3

"காதல் என்பது ஆன்மாவின் மொழி " என்று அறிஞர் கிப்ரான் கூறுகின்றார். **வாழ்க்கை என்பது மேடையல்ல, நாடகம் முடிந்தவுடன் கலைந்து செல்வதற்கு; உறவு என்பது ஓடையல்ல; வெவ்வேறு பாதைகளில் பயணம் செய்வதற்கு (அ.சார்லஸ் , வெல்லும் உறவுகள் , ப. 7).** என்று கவிஞர் சார்லஸ் தமது கவிதை நூலில் கூறியுள்ளார்.

**உறவின் அஸ்திவாரம்**

வாழ்க்கை நம்முடைய மனப்பான்மையைப் பொருத்துதான் அமைகிறது. நாம் போடும் அஸ்திவாரம் அசையாமல் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும். அஸ்திவாரம் ஆட்டம் கண்டால் நம் உறவின் கட்டடம் நொறுங்கிவிடும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் சில யோசனைகளை முன்வைத்து நடந்தால் அன்பு வற்றாமல் இருக்கும் என்று ஜேனட்லூர் என்பவர்


**Isbn Number**: 978-93-91115-46-3

'எளிமையான அன்பு' என்ற தனது புத்தகத்தில் கூறியிருக்கின்றார்.

**உண்மையான அன்பை பணத்தை வைத்து எடை போடக்கூடாது. உங்கள் உறவுகளில் நீங்கள் தவறிழைக்கும் போது மற்றவர்கள் உங்களை மன்னித்துவிட்டால் மட்டும் போதாது. நீங்களும் உங்களை மன்னிக்க வேண்டும். மற்றவர்கள் உங்களை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும். நீங்கள் மற்றவர்கள் வாழ்க்கையை வாழ முயற்சி செய்யக் கூடாது. உங்கள் வாழ்நாளில் நீங்கள் பார்க்கப்போகும் அத்தனை பேரிலும், உங்களை விட்டுப் பிரியாத ஒரேயொருவர் நீங்கள் மட்டும்தான்." (ஜேனட்லூர் , எளிமையான அன்பு , ப. 84)**

**ஆகாயம் காணாத நட்சத்திரம்**

**பாட்டி - பேத்தியின் அன்பு**

ஆகாயம் காணாத நட்சத்திரம் நாவலில்


**Isbn Number**: 978-93-91115-46-3

மீனாட்சி தனது பேத்தியான ராகவி மீது மிகுந்த பாசம் வைத்திருக்கின்றாள். மகனும், மருமகளும் வேலைக்குச் செல்லுகின்றனர். மீனாட்சி அனைத்து வேலைகளையும் செய்து முடித்து, பள்ளியில் இருந்து வரும் பேத்தியையும் அன்புடன் கவனித்துக் கொள்கின்றாள். ராகவி தன் அப்பாவிடம் ஒரு சைக்கிள் வாங்கித் தருமாறு கேட்கின்றாள். அதை மகன்அரவிந்தன் எதிர்க்கின்றான். பாட்டி மீனாட்சி சைக்கிள் வாங்கித் தருவதாக ராகவிக்கு வாக்களிக்கின்றாள்.

" ஏ பாட்டி ... என்ன பண்றே ?

“ பூரி , மசாலுக்கு வெங்காயம் நறுக்குறேண்டா”

“ எனக்கு கண்ணு எரியுது.”

“ எரியட்டும். ரொம்ப நல்லது. கண்ணுல இருக்கிற அழுக்கெல்லாம் வெளிய வந்துடும்.”

"மண்ணாங்கட்டி.”

“ பாட்டி என்னைப் பாரு.”


**Isbn Number**: 978-93-91115-46-3

" என்னடா?"

" உன் கண்ல தண்ணி வரலியே?" சொல்லு. உன் கண்ல மட்டும் ஏன் வரலை?"

"அது அப்படித்தான்டா?"

"சாமி , ஒரு நாள் என் எதிர்க்க வந்து ' மீனாட்சி மீனாட்சி .... இனிமே நீ அழுவக்கூடாது . அப்படின்னு சொன்னிச்சி ..."

" நிஜமாவா ?"

" ஆமாண்டா... அதுல இருந்து நான் அழறதில்லை. என் கண்ணுலயும் ஒரு சொட்டு தண்ணீர் வர்றதில்ல."

"அப்படியா அதனாலதான் அம்மா உன்னைத் திட்டும் போது நீ அழமாட்டேங்கிறியா?" (ஆகாயம் காணாத நட்சத்திரம் , பக்.9-10 )

மீனாட்சியை அவளது மருமகள் ஒரு வேலைக்காரியைப் போல நடத்தும் நிகழ்வு,


**Isbn Number**: 978-93-91115-46-3

அப்பிஞ்சின் நெஞ்சில் பதிந்த விதம் நமக்கு நன்றாகத் தெளிவாகிறது.

**சுயநலமான அன்பு**

மீனாட்சி மறுநாளும் அரவிந்தனிடம் ராகவிக்கு சைக்கிள் வாங்கித் தருமாறு கூறுகின்றாள். அரவிந்தன் மீனாட்சியிடம் கார் கேட்டால் கூட உன்னால் வாங்கித்தர முடியும். என்னால் முடியாது என்று கூறுகின்றான். அதை தன் மனைவி ரஞ்சனியிடம் கூறுகின்றான் .

" ராகவி சைக்கிள் கேட்டாளாம் . நீ மனசு வச்சா காரே வாங்கிக் கொடுக்கலாம்னு ஒரு போடு போட்டேன் "

" மூஞ்சி செத்திருக்குமே?"

"சாகாம ... பிடிவாதம் மட்டும் குறையல.. முடியாதுன்னு சொன்னா."

" அதுக்கு என்ன சொன்னீங்க"?


**Isbn Number**: 978-93-91115-46-3

" உன்கிட்ட பணம் இருக்கே. வாங்கிக் கொடு. ஆனா அவ சைக்கிள் ஓட்டக்கூடாது. நீ வேணா கொண்டு விட்டு கூட்டிட்டு வான்னேன்.”

" ஐம்பது வயது கிழவியைப் பார்த்துப் பேசற பேச்சா இது ?”

“ ஆமா ... பாசம் பொங்குதோ?”

( ஆகாயம் காணாத நட்சத்திரம் , பக்.13-14 )

பணத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்ற மகனுக்கும், மருமகளுக்கும் மீனாட்சியின் மனதிலுள்ள எண்ண ஓட்டங்களை அறிந்து கொள்ள நேரமில்லை என்பது இங்குத் தெளிவாகிறது .

**மாமியார் - மருமகள் அன்பு**

மீனாட்சி தனது பேத்தி ராகவிக்காக ஒரு சைக்கிளை வாங்கி அதைத் தானே ஓட்டக் கற்றுக் கொள்கிறாள். அரவிந்தனும், ரஞ்சனியும், சொந்தமாக ஒரு வீட்டினை வாங்குவதற்கு


**Isbn Number**: 978-93-91115-46-3

எண்ணுகின்றனர். பணத்தினை தனது அப்பாவான சினிமா புரொட்டியூசர் ரங்கராஜனிடம் வாங்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுகின்றனர். மீனாட்சி அதை மறுக்கின்றாள். ஏனென்றால் அவர் மீனாட்சிக்குத் தெரியாமல் இரண்டாவது திருமணம் செய்து கொண்டவர். ரஞ்சனி வீட்டுத் தரகரிடம் பேசிக் கொண்டிருக்கின்றாள். தரகர் ரஞ்சனியிடம்,

" ரங்கராஜன் சார்தானே உங்க மாமனாராம்? "

“ அவரை என் மாமனார்ன்று நீங்க சொல்றீங்க என் மாமியார் சொல்லமாட்டேங்கறாங்களே? ”

“ என்னங்க இது அதிசயம். அவங்களுக்குள்ள என்ன தகராறு "

“ இவங்களுக்குத் தெரியாமல் அவரு சின்னவீடு வச்சிருந்தாராம். அதை இவங்களால ஜீரணிக்க முடியலை. திருநீலகண்டர் பொண்டாட்டி கணக்கா வெட்டி விட்டுட்டாங்க ! "

" வெட்டின்னா ? ”


**Isbn Number**: 978-93-91115-46-3

"வெட்டின்னா வெட்டித்தான். என் வீட்டுக்காரருக்கு அப்ப ஏழோ, எட்டோ வயசாம் . நாத்தனாருக்கு பத்து வயசு, ரெண்டு பேரோடயும் வீட்டை விட்டு வெளியே வந்துட்டாங்க ... " மீனாட்சியம்மா வருகின்றாள்.

“ஏம்மா நம்ம குடும்ப விஷயத்தை மூணாம் மனுஷன்கிட்ட பேசுறியேம்மா. என் சொந்த விஷயம் பற்றி பேச உங்களுக்கு என்ன உரிமை இருக்கு?”

" என்ன பெரிய விஷயம்? இப்ப நாங்க தான் உங்களைப் பார்த்துக்கறோம். உங்க விஷயம் வேற, எங்க விஷயம் வேறன்னு, எதுவும் கிடையாது.”

"கட்டின புருஷன் கல்லுமாதிரி இருக்கும்போது அதுவும் நான் ஜீவனாம்சம் தரேன். இல்லை என்கூட வந்து இருக்கலாம்னு பெரிய மனசோடு சொல்லும்போது அதைப் பொருட்படுத்தாம எங்களையும் அவரோட சேரவிடாம செய்துகிட்டு


**Isbn Number**: 978-93-91115-46-3

இருக்கறது எந்த வகையில் சரி ? இன்னிக்கு இதுக்கு பதில் தெரியணும்!"

" மன்னி டென்ஷனாகாதீங்க. அம்மா நீங்களும் என்னைத் தப்பா புரிஞ்சுக்காதீங்க நான் வரேன். "

"என் மருமகளுக்கு தூரப் பார்வைங்கறதே கிடையாது. அவ அப்படித்தான். நீ போப்பா, "

"என்ன பெரிய தூரப்பார்வை. அவருக்கு இன்னைக்கு அவங்கப்பான்னு ஒருத்தர் இருந்தா அவர் கஷ்டப்படுவாரா? இல்லை. நான்தான் வேலைக்கு போய் சம்பாதிக்கிற நிலை இருக்குமா ? உங்களுக்கென்ன ஜாலியா பொழுதை போக்குறீங்க. இழுத்து வெளியே விட்டா தெரியும். புருஷனோட அருமை!. ராகவி வருகின்றாள்.

" பாவம்மா பாட்டியை எதுவும் சொல்லாதம்மா."

" பாட்டி இல்லை இவங்க, சரியான கிழட்டுப் பிசாசு. நான் மட்டும் உங்கப்பாவை காதலிக்காம இருந்திருந்தா இந்த ஜென்மத்துல கல்யாணமே


Isbn Number: 978-93-91115-46-3

ஆயிருக்காது. பாட்டியாம் பாட்டி." (ஆகாயம் காணாத நட்சத்திரம் , பக் .24 - 25 )

மீனாட்சியின் சுயமரியாதையை மதிக்காமல் தனது சுயநலத்திற்க்காக மீனாட்சியைத் தரக்குறைவாகப் பேசும் மருமகளாக ரஞ்சனி இக்கதையில் காட்டப்பட்டுள்ளாள். தனதுமகள் ராகவிக்குப் பாட்டி மீது இருக்கும் அன்பில் சிறிதளவும் ரஞ்சனிக்கு இல்லை என்பது இங்கு தெளிவாகிறது. மாமியார் – மருமகள் சமூகத்தில் என்றும் இணைந்து வாழ்வதில்லை என்ற ஒரு கருத்து நிலவுவதை இக்கதை உறுதி செய்கின்றது.

**பேத்தி - பாட்டி அன்பு**

மீனாட்சி வீட்டை விட்டு வெளியே சென்று விடுகின்றாள். ராகவி, ரஞ்சனியிடம் பாட்டியைப் பற்றி கேட்கும் போது பாட்டி ஓடிப்போய்விட்டதாக செல்லுகின்றாள். அரவிந்தனின் அக்கா மாலதி ஊருக்கு வருவதாக கூறுகிறாள். அம்மாவைக்


**Isbn Number**: 978-93-91115-46-3

கண்டுபிடித்து சமாதானப் படுத்துவதாகக் கூறுகின்றான் அரவிந்தன். மீனாட்சி ஆசிரமத்தில் ஒரு சமையல்காரியாக இருக்கின்றாள். ராகவிக்கு போன் செய்து பேசுகின்றாள், மீனாட்சி, ரஞ்சனிக்கு அது தெரியவரவே, ராகவியிடம் பாட்டி இருக்கும் இடத்தினைப் பற்றிக் கேட்கின்றாள். ராகவி மறுக்கின்றாள். ரஞ்சனி ராகவியை அடிக்கவே, தானும் ஓடிப்போய் விடுவதாகக் கூறுகின்றாள் ராகவி.

" நான் ஒண்ணும் பாட்டி மாதிரி இப்ப பேசலை. பாட்டி எப்பவும் இப்படி பேசினதுமில்லை. நான் உன்கிட்ட உன்ன மாதிரி நடந்துண்டேன் கத்தாதே...

“ உம் அப்புறம் ?”

" விழுப்புரம் ! "

“டீஈஈ... நான் உன் அம்மாடி.... என்கிட்டயா நீ இப்படி வாயாடறே ."


**Isbn Number**: 978-93-91115-46-3

“யாரா இருந்தாலும் சரி. பாட்டி பத்தி தப்பா பேசினா இப்படித்தான் பேசுவேன் ".

"எனக்கு அப்புறமாதான் பாட்டி தாத்தால்லாம் "

“ எனக்கு அப்படி இல்ல, பாட்டிக்கு அப்புறமாதான் நீ அப்பா எல்லாம் ".

“வரட்டும் உன் அப்பா. அந்தக் கிழவி ...

" உன்னை அப்படியே மாத்தியருக்கா.”

( ஆகாயம் காணாத நட்சத்திரம் . பக் 50 - 51)

அப்பா, அம்மாவின் அன்பைவிட பாட்டியின் அன்பே மிகவும் உயர்ந்தது என்றும் , பெற்றோரை விட பாட்டியே பெரிசு என்றும் குழந்தை ராகவி கூறுகின்றாள். பாட்டி, பேத்தியின் அன்பு இங்கு ஆழமாக வெளிப்படுகிறது.

**மாற்றான் தாயின் அன்பு**

புரொடியூசர் ரங்கராஜன் முழுப்பணத்தையும் கொடுத்து அரவிந்தனின் பெயரில் ஒரு வீட்டினை வாங்கியதாகக் கூறுகின்றார் தரகர். அரவிந்தனின்


**Isbn Number**: 978-93-91115-46-3

அக்காள் மாலதிக்கு வீடு வாங்கித் தரப்போவதாகவும் ரஞ்சனி கூறுகின்றாள். மாலதியும் அம்மாவை விட அப்பாதான் உயர்ந்தவர் என்று கூறுகின்றாள். அரவிந்தனையும் வீட்டினை வாங்கிக் கொள்வதற்குத் தூண்டுகின்றாள் மாலதி. ரங்கராஜனின் இரண்டாவது மனைவி சாவித்ரி வீட்டுத் தரகரைப் பார்ப்பதற்காக வருகின்றாள் .

"வாங்கம்மா வாங்க .. நீங்களே இங்க வருவீங்கன்னு எதிர்பார்க்கலை. ஏதாவது அவசரமா"

" அதெல்லாம் ஒண்ணுமில்ல. அரவிந்தன் என்ன சொன்னான்னு தெரிஞ்சிக்கத்தான் வந்தேன் "

“நீங்க சொன்ன மாதிரியேதான் நடந்துக்கிட்டிருக்கேன். இரண்டொரு நாள்ல வந்து பார்ப்பான்னு நினைக்கிறேன்.”'

" கட்டாயமா வருவானா?”

“ வருவார்ம்மா. அவர் மனைவி ரஞ்சனி அவரை கண்டிப்பா வழிக்கு கொண்டு வருவாங்க. "


**Isbn Number**: 978-93-91115-46-3

" இந்தச் சிக்கலால அக்கா வீட்டை விட்டுப் போயிட்டாங்களாமே? "

“ உங்களுக்கு எப்படித் தெரியும்? “

“என்ன கேள்வி இது. என் கவனமெல்லாம் இப்ப அக்கா குடும்பம் மேலதான் இருக்கு.”

“ உங்கள என்னால புரிஞ்சுக்கவே முடியலை. எந்த இப்பச் சக்களத்தியும் இப்படி நடந்து நான் பார்த்ததில்ல. "

(ஆகாயம் காணாத நட்சத்திரம், பக். 88-89)

தனது அப்பாவின் இரண்டாவது மனைவியாக இருந்தாலும், அரவிந்தனுக்கும், மாலதிக்கும் சொத்தில் சரிபங்கு கிடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்டவனாக சாவித்திரி அம்மாள் இக்கதையில் காட்டப்பட்டுள்ளாள். சாவித்திரியின் தாயன்பு இங்கு வெளிப்படுகின்றது.

**மகள் - தாய் அன்பு**


**Isbn Number**: 978-93-91115-46-3

மீனாட்சி தங்கியிருக்கும் நவஜீவன் ஆசிரமத்திற்கு டி.வி. சீரியல் எடுப்பதற்காக பிரபல சினிமா டைரக்டர் பூர்ணசந்தர் வருகின்றார். சீரியலில் அம்மாவின் நடிப்பிற்குப் பொருத்தமாக , அங்கு வேலைபார்க்கும் மீனாட்சியம்மாளை நடிக்க வைக்க சம்மதம் வாங்குகின்றார். மீனாட்சியும் ஒத்துக் கொள்கின்றார். சீரியலில் மீனாட்சியின் மகனாக நடிக்கும் கோபால் தனது மனைவி நிர்மலாவைக் கொடுமைப்படுத்துவதை அறிகின்றாள் மீனாட்சி அம்மாள். நிர்மலா தற்கொலை செய்வதற்கு முடிவெடுத்து விஷமருந்துகின்றாள். அவளை மீனாட்சியும், சீரியலில் டி.ஐ.ஜியாக நடிக்கும் ராம்குமாரும் காப்பாற்றுகின்றனர். ஆசிரமத்தின் தலைவர், அப்பாவாக விளங்கும் சாஸ்திரி வருகின்றார்.

சொத்திற்காக மனைவியைக் கொடுமைப் படுத்தும் கணவன்மார்கள் இச்சமுதாயத்தில்


**Isbn Number**: 978-93-91115-46-3

வாழ்வது அங்கு கூறப்பட்டுள்ளது. ஆபத்தில் உள்ளவர்களுக்கு ஓடிச்சென்று உதவிடும் எண்ணம் கொண்ட தாயுள்ளம் கொண்ட பெண்கள் இருப்பதையும் இந்நாவல் கூறுகின்றது. எல்லோரையும் தனது மகளாகப் பாவிக்கும் தாயாக மீனாட்சியம்மாள் இக்கதையில் காட்டப்பட்டுள்ளார். ஒரு தாய்க்கும், மகளுக்குமான பாசத்தினை நம்மால் இங்கு உணர முடிகின்றது.

**மகன் தாய் அன்பு**

அரவிந்தனின் மனைவி ரஞ்சனி தனது மாமனாரின் சொத்துக்களை அடைவதற்காக, மீனாட்சியம்மாள் சொத்தின் மீது கேஸ் போடச் சொன்னதாகப் பொய்கூறி, ஒரு போலியான ஆவணத்தைத் தயார் செய்து சொத்தின் மீது கேஸைப் போடுகின்றாள். மீனாட்சியம்மாள் இருக்கும் ஆசிரமத்தைத் தெரிந்து கொண்டு அவரைப் பார்க்கச் செல்லுகின்றாள் ரஞ்சனி.


**Isbn Number**: 978-93-91115-46-3

மீனாட்சியம்மாள் மருமகளைப் பார்ப்பதற்கு மறுப்பு தெரிவிக்கின்றாள். சொத்தின் மீது வழக்கு தொடர்ந்ததால் அரவிந்தனின் அப்பா ரங்கராஜன் ஹார்ட் அட்டாக் வந்து மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றார்.

" அம்மா , எங்கேம்மா இருக்கே ? எங்கிருந்து போறே? முதல்ல அதைச் சொல்லு. அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்கும்மா... "

" என்னது.. ஹார்ட் அட்டாக்கா?! "

"ஆமாம்மா உனக்குத் தெரியாதா?"

"எனக்கு எப்படிப்பா தெரியும்? உனக்கு யார் சொன்னது ? "

" என்னடா சொல்றே ? எந்த வக்கீல் நோட்டீஸ் ...

நீ சொல்றதே புரியலையே ... "

" ஏம்மா , நீ லெட்டர் எழுதி , அப்பாவுக்கு நோட்டீஸ் அனுப்பு ... அப்பதான் அவரைத் திருத்தி வழிக்கு கொண்டு வரமுடியும்னு சொல்லலை ... "


**Isbn Number**: 978-93-91115-46-3

" நானா ... லெட்டரா?”

" அப்பா மேல கேஸ் போடுன்னு நீ லெட்டர் எழுதலை ! “

“ என்னடா கேள்வி? ரஞ்சனிக்குத்தான் நான் தங்கியிருக்கிற அநாதை ஆசிரமம் பத்தி நல்லாத் தெரியுமே".

“ வீட்டைவிட்டு வந்ததுல இருந்தே நான் அங்கதான் தங்கியிருக்கேன். ரஞ்சனிக்கு இது நல்லாத் தெரியுமே! "

" சரி இனி ஒரு நிமிஷம் கூட நீ எங்களை விட்டுப் பிரிஞ்சிருக்கக் கூடாது . பிரிஞ்சிருக்கவும் நான் விடமாட்டேன்...” ( ஆகாயம் காணாத நட்சத்திரம் , பக். 309 - 310 )

சொத்திற்காக தனது கணவனுக்குத் தெரியாமல் ஏமாற்று வேலையைச் செய்கின்றாள் ரஞ்சனி. சொத்தை அடைய வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு


**Isbn Number**: 978-93-91115-46-3

செயல்படுகின்றவளாக ரஞ்சனி இங்கு காட்டப்படுகின்றாள்.

**தாயின் சுயமரியாதை**

மருத்துவமனைக்குச் சென்ற அரவிந்தனுக்கு பேரதிர்ச்சி காத்துக் கொண்டிருக்கிறது. ரங்கராஜனின் சொத்து மதிப்பு ஐந்து கோடி. ஆனால் கடன் மதிப்பு ஏழு கோடி. வழக்கு தொடர்ந்த காரணத்தினால் கடன் தொகையிலும் அவனுக்கு பங்கு உண்டு என்ற வக்கீல் கூறுகின்றார். மீனாட்சியும் அங்கு வருகின்றாள்.

"எதைச் செய்தாலும் அதுல ஒரு தெளிவும், திடமும் இருக்கணும். எப்ப சொத்து வேணும்னு கேஸ் போட்டியோ அப்ப அதிலையே நில்லு. கடன் வந்தாலும் சரி. சமாளி. அதை விட்டுட்டு சட்டி சுட்டா கையை விட்டுடற மாதிரி என்ன பேச்சு இது "

"அப்ப .. நான் கேஸ் போட்டதுல உனக்கு வருத்தம் இல்லையாம்மா "


Isbn Number: 978-93-91115-46-3

" இனி அதைப் பத்தி பேசி என்னடா பிரயோஜனம். இனி நீ அந்த பாட்டைல போறதுதான் சரி..." (ஆகாயம் காணாத நட்சத்திரம் , பக்.318-319 )

மீனாட்சியம்மாளுக்கு மகனும், மகளும், மருமகளும் தனது சுயமரியாதைக்கு முக்கியத்துவம் தராததை எண்ணி வருத்தம் ஏற்பட்டது உண்மை. சொத்திற்கு ஆசைப்பட்டவர்கள் அதனால் வரும் பிரச்சனைகளையும் எதிர்கொள்ள வேண்டும் என்ற உண்மையை மீனாட்சியம்மாள் தனது குடும்பத்தினருக்கு உணர்த்துவது இங்கு கூறப்பட்டுள்ளது.

**வயதான தாயின் அறப்போராட்டம்**

ரங்கராஜன் அபாய கட்டத்தைத் தாண்டினாலும் சக்கர நாற்காலி மனிதர் ஆகிறார் . சாவித்திரியும், ரஞ்சனியும் அவரைக் கவனித்துக் கொள்கின்றனர். கேஸின் முழு தீவீரத்தையும் ரஞ்சனி பார்த்துக் கொள்கின்றாள். அரவிந்தன் ஒரு


**Isbn Number**: 978-93-91115-46-3

ஜடத்தினைப் போல் வேலைக்குச் சென்று வருகின்றான். மீனாட்சியம்மாள் ரங்கராஜனை மன்னிக்க மறுக்கின்றாள். டி.வி. சீரியல்களில் வரும் கேரக்டராக தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்வினை சினிமாவிற்கு அர்ப்பணித்துக் கொள்கின்றாள் மீனாட்சி. ஒரு நாள் கண்டிப்பாக அம்மா வந்து அப்பாவைப் பார்த்து மன்னித்துவிடுவாள் என்று அரவிந்தன் எண்ணிக் கொண்டிருக்கின்றான். மீனாட்சி வானத்தில் ஒளிரும் நட்சத்திரத்தைப் போல் ஒவ்வொரு நாளும் ஜொலித்துக் கொண்டிருக்கின்றாள். அரவிந்தன், மீனாட்சி அம்மாளிடம் ,

" ஏன் இப்படி இருக்கிங்க ... ?

எதுக்கு இத்தனை பிடிவாதம்? அப்பாதான் மாறிட்டாரோ?“

“இல்லப்பா ... அவர் மாறியிருக்கலாம். அவரோட அவர் பழைய நாட்களை என்னால மறக்க முடியலை.


**Isbn Number**: 978-93-91115-46-3

மறுக்கவும் கூடாது. அவரோட தப்புதான் என்னை வெளியே தள்ளி தனி மனுஷியா போராட வெச்சது. படிக்கறதுல இருந்து பார்க்கற சினிமா வரை ஒரு பொண்ணு தனியா சமுதாயத்துல போராடி ஜெயிக்க முடியாது. அதுக்கு நிறைய விலை கொடுக்கணும்னே சொன்னப்ப நான் அதையெல்லாம் பொருட்படுத்தலை. தனி மனுஷியா போராடி ஜெயிச்சேன்".

“வயசாயிட்டாலே மருமக கையால இடிசோறு, திண்ணைல ஒரு மூலைங்கறத கடவுள் என் மூலமா மாத்தியிருக்கார். நான் திரும்பப் போய் அவரைப் பார்த்து மிஸஸ் ரங்கராஜா வாழ்றதையும் , இந்தப் போராட்டத்துக்கு ஒரு முடிவு வர்றதையும் நான் விரும்பலை". (ஆகாயம் காணாத நட்சத்திரம் ப. 327)

வயதான காலத்தில் மீனாட்சியம்மாளுக்கு ஏன் இந்த வீம்பு என்று நம் மனதில் தோன்றலாம் . ஆனால் நாம் மீனாட்சியம்மாளின் இடத்தில் இருந்து


**Isbn Number**: 978-93-91115-46-3

பார்த்தால் இந்த வாழ்க்கையோட கனலையும், அனலையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். வயதான முதியவர்களுக்கும் ஒரு சக்தி இருப்பதை மீனாட்சியம்மாளின் வாயிலாக நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இந்நாவலில் ஒரு தாய் , தன் மகன் மீது கொண்ட அன்பினையும் , ஒரு பாட்டி பேத்தி மீது கொண்ட அன்பினையும், பேத்தி பாட்டி மீது கொண்ட பாசத்தினையும், ஒரு மனைவி தன் கணவன் மீது கொண்ட அன்பினையும், மாற்றான் தாயாக இருந்தாலும் மூத்த தாரத்தும் குழந்தைகளையும் தன் குழந்தைகளாகப் பாவிக்கின்ற அன்பினையும், சமுதாயத்தில் வாழும் பிற பெண்களையும் தன் மகளாக எண்ணுகின்ற ஒரு தாயின் அன்பினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்திரா சௌந்தரராஜனின் ஆகாயம் காணாத நட்சத்திரம் என்னும் நாவலில் மனித


**Isbn Number**: 978-93-91115-46-3

உறவுகள் என்ற இக்கட்டுரையில் உறவு பற்றிய விளக்கங்களும், நல்ல உறவின் அஸ்திவாரமும், உறவை உருவாக்கும் முறை பற்றியும், உறவே உயிர்நாடி என்பதும், பல்வேறு உறவுமுறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

அன்பினால் எதையும் சாதித்துவிடலாம். அதிகாரத்தினால் எதையும் சாதிக்க இயலாது. ரஞ்சனி தனது அதிகாரத்தினால் மீனாட்சியம்மாளைத் துன்புறுத்துகின்றாள். இறுதியில் மீனாட்சியம்மாளின் துணை இல்லாமல் வழக்கைத் தனியாகவே சந்திக்கும் நிலைக்கு உள்ளாகின்றாள்.

மீனாட்சி அம்மாள் தன் குடும்பத்தின் மீது வைத்த அன்பின் பொருட்டாக தான் சம்பாதிக்கும் அனைத்தையும் தனது குடும்பத்திற்கே செலவிடுகின்றார். முதியவர்களை நாம் சிறியவர்களாக எண்ணுதல் கூடாது. அவர்களது


**Isbn Number**: 978-93-91115-46-3

மனம் வைராக்கியம் கொண்டது. உறவுகளின் தொடர்புகளையும் அன்பினையும் யாராலும் பிரித்தல் இயலாது என்ற உண்மையும் ஆசிரியரின் நாவல் வழி வெளிப்படுகிறது.

**தொகுப்புரை**

உலகம் என்பது உறவை கொண்டுதான் உருவாக்கப்படுகிறது. மாமியாரை வேலைக்காரியாக நடத்தும் மருமகளும் நடப்பியலில் இருப்பதை இந்நாவலில் ஆசிரியர் கூறியுள்ளார். பணத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் மனிதர்களிடையே உறவுகள் பலவீனமாகவே இருக்கின்றன. மாமியாரைக் கொடுமைப்படுத்தும் மருமகள்களை மகளாகப் பாவிக்கும் மாமியார்கள் இச்சமுதாயத்தில் வாழ்வது இந்நாவலில் கூறப்பட்டுள்ளது. பெற்றோரின் அன்பை விட பாட்டியின் அன்பே சிறந்தது என்று


**Isbn Number**: 978-93-91115-46-3

குழந்தை கூறுவதிலிருந்து அதன் ஆழமான அன்பு தெளிவாகிறது.

சமுதாயத்தில் வாழும் அனைத்துப் பெண்களையும் மகளாகப் பாவிக்கும் தாய்மார்கள் இருப்பதை இந்நாவலின் கருத்துக்கள் நமக்கு உணர்த்துகின்றன. சொத்திற்காக மனைவியை கொடுமைப்படுத்தும் கணவன்மார்கள் இருப்பதை இச்சமூகத்தின் வாயிலாக நாம் உணர்ந்து கொள்ளலாம். வயதானவர்களின் சுயமரியாதைக்கு மதிப்பு தரவேண்டும் என்ற கருத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## துணைநூற்பட்டியல்

[1] இந்திரா சௌந்தரராஜன் - ஆகாயம் காணாத நட்சத்திரம், திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 2002.

[2] சார்லஸ். அ - வெல்லும் உறவுகள், சாரதா


**Isbn Number**: 978-93-91115-46-3

பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2000.

[3] மூர்த்தி. ச - உறவுகள் கட்டுக்கோப்பானது, நர்மதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2000.

[4] ராவ் பி. எஸ். - மனதில் மறைந்த சக்தி, நர்மதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2003.

[5] ஜேனட்லூர்- எளிமையான அன்பு, மனோரா பதிப்பகம், சென்னை. மறுபதிப்பு, 2010.


**Isbn Number**: 978-93-91115-46-3

# Narration and Characters in the Novels of Muthulakshmi Raghavan

**S. Revathi,** Ph.D Scholar, Department of Tamil, Vivekanandha College of Arts and Science for Women, Tiruchengode – 637205, Namakkal, Tamil Nadu, India.
**Email id:** jishnurevathi@gmail.com
**ORCiD**: https://orcid.org/0000-0002-6936-6348
**DOI:10.5281/zenodo.5520567**

## Abstract

*Day by day new writing exists in Tamil literature. Writers do their jobs to cater for the intellectual needs of the people. the Tamil world of writing is indebted to the writers who constantly write and support Tamil flourishment. Novels are accepted and loved by the modern people of the Tamil Society. Muthulakshmi Raghavan is one of the notable novelists who put laurels to Tamil writing. Human life is merged with individual quality, language and country. Every writer will write in regard to it. The author has delicately shown the lifestyle of the characters of the modern man, thoughts, actions, problems, yearnings and longings in society. This article focuses on introducing the novels of Muthulakshmi Raghavan and the narrative techniques that she has employed to deliver her themes in the story and the creation of characterization in her novels.*


**Isbn Number**: 978-93-91115-46-3

**Keywords:** Narration, Characters, Novels, Muthulakshmi Raghavan.

## References


[1] Akilan. Kadhaikalai, Barry Bookstore, Chennai, 1981.

[2] Ramalinga, M. Novel Literature, Tamil Library, Chennai, 1976.

[3] Kailasapathi, K. Tamil Novel Literature, New Century Book House (P) Ltd., Chennai-600098, 1987.

[4] Shacithananthan, V. Western Literary Vocabulary, Macmillan India Limited, Chennai, 1983.

[5] Muthulakshmi Raghavan. Moon to Earth, Lakshmi Balaji Publishing, Chennai-600035, 2013.

[6] Muthulakshmi Raghavan. Firefly, Lakshmi Balaji Publishing, Chennai-600035, 2017.

[7] Muthulakshmi Raghavan Malaisaralai Manam Nanaithai, Lakshmi Balaji Publishing, Chennai-600035, 2013.

[8] Muthulakshmi Raghavan. Anthivanam, Lakshmi Balaji Publishing, Chennai-600035, 2015.

[9] Mohan, Mu.Va. vin Novels, Manivasakkar Library, Chidambaram, 1972.




**Isbn Number**: 978-93-91115-46-3

# முத்துலட்சுமி ராகவன் நாவல்களின் கதையமைப்பும் கதைமாந்தர்களும்

**செ.ரேவதி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத்துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
திருச்செங்கோடு - 637205, நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
**Email id:** jishnurevathi@gmail.com
**ORCiD**: https://orcid.org/0000-0002-6936-6348
**DOI: 10.5281/zenodo.5520567**

**ஆய்வுச் சுருக்கம்**

முத்துலட்சுமி ராகவன் அவர்களின் நாவல்களில் பூமிக்கு வந்த நிலவு, அக்கினிப் பறவை, மழைச்சாரலாய் மனம் நனைத்தாய், அந்தி வானம் ஆகிய நான்கு நாவல்களின் கதையைச் சுருக்கி அதே வேளையில் கதையின் எக்காரணியும் விடுபடாமல் கூறப்பட்டுள்ளது. இக்கட்டுரை முழுவதும் இந்த நாவல்கள் தொடர்பாக இடம்பெறும் கதை மாந்தர்கள், நாவல் இலக்கியம் பற்றி விளக்கும்போது அதன் தொடர்பான சான்றாதாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.


**Isbn Number**: 978-93-91115-46-3

பூமிக்கு வந்த நிலவு என்ற நாவலில் இடம்பெறும், ஸ்ரீராமன், தசரதன், சாரதா, சரவணன், சரிதா, கயிலைநாதன், பாரிஜாதம், நாராயணமூர்த்தி, தம்பிதுரை, வெந்நிலா, ரங்கம், சொக்கலிங்கம், ஷயாம் சுந்தர், சீதா, ரகுநாதன் என்ற கதைமாந்தர்களைப் படைப்பாளர் படைத்துக் காட்டியுள்ளார். அக்கினிப்பறவை நாவலில், அன்னம், தயானந்தன், காந்தாமணி, ஆதித்தன், சந்தியா, சந்தானலட்சுமி, பிரதீப், ஆடியபாதம், பரமசிவம், விமலா, நாராயணன்;, தணிகாசலம், மலையப்பன், பூங்காவனம், வெள்ளையம்மாள் என்ற கதைமாந்தர்களும், மழைச்சாரலாய் மனம் நனைத்தாய் நாவலில், சாருலதா, ஆத்மாராம், சங்கரன், பார்வதி, சுதாகரன், சீத்தாராம், நித்யா, சக்திவேல், புஷபவள்ளி என்ற கதைமாந்தர்களும், அந்தி வானம் நாவலில், சங்கர், யமுனா, மாளவிகா, பிரசன்னா, பூங்கொடி, வசந்த் என கட்டுரையின்


**Isbn Number**: 978-93-91115-46-3

முடிவில் தொகுப்புரையும் முடிவுரையும் அதன் பிறகு நாவலிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கும் ஆதாரங்கள் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப் பட்டுள்ளன.

**கலைச்சொற்கள்:** முத்துலட்சுமி ராகவன் - பூமிக்கு வந்த நிலவு - அக்கினிப்பறவை - சந்தியா - தைரியமான பெண் - இரண்டாம் திருமணம் - மழைச்சாரலாய் மனம் நனைத்தாய் - மாமியார் கொடுமை - அந்தி வானம் - காதல் திருமணம்.

**முன்னுரை**

தமிழ்ப் படைப்புலகில் புதிய படைப்புகள் நாளுக்கு நாள் தோற்றம் பெற்று வருகின்றன. படைப்பாளர்கள் தங்களது படைப்புப் பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். தமிழ்ப் படைப்புலகம் சீராக இயங்கி வர எழுத்தாளர்களின் ஆர்வமே முக்கிய காரணமாக விளங்குகிறது. படைப்புகள் தோன்ற எழுத்தாளர்கள் முக்கிய


**Isbn Number**: 978-93-91115-46-3

காரணமாக விளங்குவது போலவே அவற்றை வெளியிடும் பதிப்பாளர்களும் முக்கியக் காரணமாகக் கருதப்படுகின்றனர்.

மேலை நாட்டாரின் வருகையால் தமிழுக்குக் கிடைத்த புதிய இலக்கிய வடிவம் நாவல் ஆகும். இந்நாவல்கள் உள்ளடக்கக் கூறுகளின் அடிப்படையில் வரலாற்று நாவல்கள், வட்டார நாவல்கள், சமூக நாவல்கள், துப்பறியும் நாவல்கள் எனப் பலவகைகளைக் காணமுடிகிறது. நாவல்கள் இலக்கியச்சுவை மட்டும் தருவன அல்ல. சமுதாயம், மானிடவியல், உளவியல், வரலாறு, பண்பாடு ஆகியனவற்றை வெளிப்படுத்தும் சான்றுகளாக விளங்கி வருகின்றன.

நாவல் இலக்கியம் அனைத்துத் தரப்பு மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும் நிலையில் உள்ளது. அத்தகைய நாவல் இலக்கியத்தைப் படைத்து, படைப்புலகில் வெற்றி கண்டவர்


**Isbn Number**: 978-93-91115-46-3

முத்துலட்சுமி ராகவன். முத்துலட்சுமி ராகவன் படைப்புகளை அறிமுகம் செய்யும் வகையிலும், ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாவல்களின் கதைப்போக்கு, பாத்திரப்படைப்புகள், கதைச்சுருக்கம் போன்றவற்றை எடுத்துரைக்கும் விதத்திலும் முத்துலட்சுமி ராகவன் நாவல்களின் கதையமைப்பும் கதைமாந்தர்களும் என்னும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**தற்கால நாவலாசிரியர்கள்**

தற்கால நாவலாசிரியர்கள் நகர மாந்தர் வாழ்க்கையில் தனிமனிதவாதம், தார்மீகப் பிரச்சினை, பாலுறவுப் பிரச்சினை, உளவியல் அக்கறை முதலியனவற்றைக் களமாகக் கொண்டு தங்கள் படைப்புகளைப் படைக்கின்றனர். இதனை,

> **அண்மையில் பிரபல்யம் பெற்றுள்ளவர்களில் ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி, அகிலன், அசோகமித்ரன், ஆதவன், கல்பனா ஆகியோர் சென்னை நகரத்தை மட்டுமின்றி**


**Isbn Number**: 978-93-91115-46-3

**பம்பாய், புதுடில்லி, கல்கத்தா முதலிய பெருநகரங்களையும் கடல் கடந்த நகரங்களையும் நாவல்களுக்குக் களமாய்க் கொள்வர் (க.கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப.296-297)**

என்ற கூற்றின் மூலம் அறியலாம். இதில் நாவலாசிரியர்கள் பலர் தமிழ் இலக்கியத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

**கதைமாந்தர்கள்**

மனித வாழ்க்கை முறைகள் பண்பு, மொழி, நாடு போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு தன்மைகள் கொண்டவையாக இருக்கின்றன. படைப்பாசிரியர் முத்துலட்சுமி ராகவன் தமது புதினங்களில் அவர் படைத்துள்ளக் கதைமாந்தர்களின் மூலம் சமகால மனிதர்கள், அவர்களுடைய செயல்முறைகள், வாழ்வியல் சிக்கல்கள் ஆகியனவற்றை உணர்த்தியிருப்பதை


**Isbn Number**: 978-93-91115-46-3

அறியலாம். நாவலின் கூறுகளில் முதன்மையானது கதைமாந்தர்கள் ஆகும். அத்தகைய கதைமாந்தர்கள் நாவலைப் படிப்பவர் உள்ளத்திலிருந்து பிரிவதே இல்லை. இதனை,

> **நாவல் என்பது கற்பனையுடன் கூடிய நீண்ட உரை வடிவம். இதில் பாத்திரப் படைப்பிற்கே அழுத்தம் கொடுக்கப்படும் (The Readers Digest, Great Encyclopaedic Dictionary, Vol. III, p.1058)**

என்று கூறுவதன் மூலம் பாத்திரப் படைப்பிற்குரிய முதன்மைத் தன்மையை அறியமுடிகிறது.

நாவல் இலக்கியக் கட்டமைப்புகளுள் பாத்திரப் படைப்புகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறப்படுகிறது.

> **உலகத்துப் பெரும் புதினங்களை எல்லாம் நாம் நினைக்கிறபோது முதலில் நம் நினைவுக்கு வருவது அவற்றைப் படைத்த**


**Isbn Number**: 978-93-91115-46-3

**ஆசிரியர்களோ, அந்நாவலின் கருவோ, கதைப்பின்னலோ, பிறவோ அல்ல. கதை மாந்தர்களே (மா. இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப. 69)**

இக்கூற்றில் நாவலைப் படிப்பவரின் உள்ளத்தில் பல காலம் நின்று வாழும் ஆற்றல் பெற்றவை கதைமாந்தர்களே என்பதை அறியமுடிகிறது. கதை மாந்தர்கள் நாவலின் உயிர் போற்றப்படுவர்கள். அவர்கள் படிப்பவர்க்கு மட்டும் அல்லாமல், படைப்பவர்க்கும் உண்மை மனிதர் போல் தெரிகின்றனர்.

**என் கதைத்தலைவியர் தலைவியரை, அவர்கள் எவ்வளவு குறைபாடு உடையவர்களாக இருந்தாலும் நான் நேசிக்கிறேன். என் இரத்தத்திலிருந்தும், உயிர் மூச்சிலிருந்தும், இதயத் துடிப்பிலிருந்தும் பிறந்தவர்கள் அவர்கள்.**


**Isbn Number**: 978-93-91115-46-3

> **என்னை விட உயர்ந்தவர்கள் மண்ணின் நெருப்புப் புழுதியில் அலைந்து திரியும் என் உணர்ச்சிகள் என்னிலும் உயர்ந்து விண்ணைநோக்கிப் பிறந்த வேளைகளில் என்னிடமிருந்து பிறந்தவர்கள் அவர்கள் (அகிலன், கதைக்கலை, ப.111)**

என்று அகிலன் தம் படைப்பு அனுபவத்தைத் தெரிவித்துள்ளமையும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**கதைமாந்தர்களின் முக்கியத்துவம்**

ஓர் நாவல் கதைமாந்தர்களால் தான் வெற்றி பெறும். நாவலின் தொடக்கநிலைச் சித்தரிப்பும், உருக்கமான தொடர்ச்சியும், வாழ்க்கையில் நடக்கும் உண்மையான நிகழ்ச்சிகளின் சாரமும், மனதைக் கவரும் ஆற்றலும் பாத்திரப் படைப்பிற்குரிய தகுதிகளாகும். **படைப்பாளியின் மன ஓட்டத்திலிருந்து புறப்படும் உயிர்த்துடிப்பே பாத்திரப் படைப்பு (அகிலன், கதைக்கலை, ப.3)**


**Isbn Number**: 978-93-91115-46-3

என்ற அகிலனின் கூற்று இங்கு நினைக்கத்தக்கது. நாவலின் மொழி, நடை, கரு ஆகியவற்றை விட நெஞ்சை அள்ளும் ஆற்றல் பெற்றுத்திகழ்வது பாத்திரப் படைப்பு எனலாம். கதைமாந்தர்களை உறுதிப்படுத்தும் நோக்கில், ஒன்றுடன் ஒன்றை மோதவிட்டும் இணைத்தும் காட்டலாம். இலக்கியப் படைப்புகளில் பிற படைப்புகளை விட கதைமாந்தர்களுக்கு முதன்மையிடம் தருவது நாவல் இலக்கியப் படைப்பாகும். இதனை,

> **ஒரு நாவலின் கருவுக்கு உயிரும் உணர்ச்சிமிக்க வாழ்வும் இல்லை. ஒரு நாவலின் நடைக்கு நம் நெஞ்சை அள்ளும் ஆற்றல் இல்லை. நம் நெஞ்சை அள்ளும் ஆற்றல் பெற்று, நம் நெஞ்சில் உயிரும் உணர்ச்சிமிக்க வாழ்வும் கொண்டு வாழும் ஒரு நாவல் கூறு பாத்திரப் படைப்பே ஆகும் (மோகன், மு. வ. வின் நாவல்கள், ப.57)**


**Isbn Number**: 978-93-91115-46-3

என்றும்,

> **ஒரு நாவலாசிரியர் புவியியலுக்கோ, வரலாற்றுக்கோ, வானவியலுக்கோ உண்மையானவராக இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் மனித இதயத்துக்கு உண்மையானவராக இருத்தல் அவசியம். எனவே, அவர் படைக்கும் பாத்திரங்கள் நம்ப வைப்பவையாக அமைய வேண்டும்** (John Hispers, Art Philosophy-07, The New Encyclopaedic Britanica.p.53)

என்றும் அறிஞர்கள் விளக்குகின்றனர். இதன் மூலம் ஒரு புதினத்தின் படைப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது பாத்திரப் படைப்பே என்று பாத்திரத்தின் முக்கியத்துவத்தைக் கூறியுள்ளது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**முத்துலட்சுமி ராகவன் நாவல்கள்**

நாவல் இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு


**Isbn Number**: 978-93-91115-46-3

சிறப்பு நிலையையும் தனிப்பாதையையும் வகுத்துக் கொண்டவர் முத்துலட்சுமி ராகவன். அவரது நாவல்களில்,

1. பூமிக்கு வந்த நிலவு
2. அக்கினிப் பறவை
3. மழைச்சாரலாய் மனம் நனைத்தாய்
4. அந்தி வானம்

ஆகிய நாவல்கள் இங்கு ஆய்வு ஆதாரங்களாக அமைகின்றன.

1. *பூமிக்கு வந்த நிலவு* – கதைமாந்தர்கள், இந்நாவலில்,

ஸ்ரீராமன் - தசரதனின் மகன்

தசரதன் - கயிலைநாதனின் மகன்

சாரதா – தசரதனின் தங்கை

சரவணன் - தசரதனின் நண்பன்

சரிதா – பள்ளி ஆசிரியை

கயிலைநாதன் - தசரதனின் அப்பா


**Isbn Number**: 978-93-91115-46-3

பாரிஜாதம் - தசரதனின் அம்மா

நாராயணமூர்த்தி – பண்ணையார்

தம்பிதுரை – பாரிஜாதததின் அப்பா

வெந்நிலா – நாராயணமூர்த்தியின் மகள்

ரங்கம் - தசரதனின் அத்தை

சொக்கலிங்கம் - சரவணன் அப்பா

யாம் சுந்தர் - வெந்நிலாவுடன் நிச்சயித்த மணமகன்

சீதா – பக்கத்து வீட்டுப் பெண்

ரகுநாதன் - சீதாவின் கணவர்

போன்ற கதைமாந்தர்களைப் படைப்பாளர் படைத்துக் காட்டியுள்ளார்.

**கதைக் கரு**

பூமிக்கு வந்த நிலவு என்ற நாவலில் ஒரு பெண் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருப்பினும், திருமணத்திற்குப் பின் தன் கணவனின் குடும்பச் சூழல் அறிந்து நடந்துகொள்ள


**Isbn Number**: 978-93-91115-46-3

வேண்டும் என்பதை கருவாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்.

**கதைச்சுருக்கம்**

அல்லியூர் அழகான கிராமம். அங்கு விவசாயம் மட்டுமே முதன்மைத் தொழிலாக இருந்து வந்தது. அவ்வூரில் வாழும் கயிலைநாதன் பாரிஜாதம் தம்பதியருக்கு இரண்டு குழந்தைகள். முதல் குழந்தை தசரதன். இரண்டாவது குழந்தை சாரதா. இருவரையும் நன்றாகப் படிக்க வைத்தார் கயிலைநாதன். தசரதன் எம்.ஏ படித்துவிட்டு விவசாயம் செய்துகொண்டிருந்தான்.

பாரிஜாதத்தின் தூரத்து உறவுமுறையான அண்ணன் நாராயணமூர்த்தி சென்னையில் வசித்து வருகிறார். நாராயணமூர்த்தி தன் ஒரே மகளான வெந்நிலாவை அழைத்துக்கொண்டு அல்லியூர் கிராமத்திற்கு வந்திருந்தார். தன் மகளின் நிச்சயதார்த்தம் முடிந்த நிலையில் திருமண


**Isbn Number**: 978-93-91115-46-3

ஏற்பாட்டிற்காக அவரது அரண்மனை வீட்டைச் சரிசெய்யும் பணிகளைச் செய்ய பாரிஜாதத்தின் வீட்டில் தங்கிப் பணிகளைச் கவனித்துக் கொள்ள வேண்டி அல்லியூர் கிராமத்திற்கு வந்தார்.

தசரதனின் நண்பன் சரவணன். தசரதனின் வீட்டிற்குக் காரில் வந்திறங்கிய வெந்நிலாவைப் பற்றி சரவணன் தசரதனிடம் கூறினான். ஆனால் தசரதன் கண்டுகொள்ளவில்லை. தசரதன் வயலில் நீர்ப்பாய்ச்சிவிட்டு வீட்டிற்கு வந்தான். அவன் தன் அம்மா மூலம் வெந்நிலா தன் மாமா மகள் என்பதை அறிந்து கொண்டான்.

வெந்நிலாவைக் கண்டு கொள்ளாமல் இருந்ததால் அவளுக்கு தசரதன் மீது கோபம் எற்பட்டது. தசரதன் பக்கத்து ஊர் திருவிழாவிற்குச் சென்றுவிட்டு மூன்று நாட்கள் கழித்துதான் வீடு திரும்பினான். உடனே வயலில் நீர்பாய்ச்ச சென்று நேரமாகி வீட்டிற்கு வந்தான். களைப்பு மிகுதியால்


**Isbn Number**: 978-93-91115-46-3

நேராகத் தன் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான். அதுவரை வெந்நிலா தன் அறையில் தங்கியிருந்தது அவனுக்குத் தெரியாது.

மறுநாள் விடியற் காலையில் கயிலை நாதனுக்குத் தங்கை முறையுடைய ரங்கம் என்பவள் வீட்டிற்கு வந்தாள். அவள் ஊர் வம்பு பேசுவதில் கெட்டிக்காரி. பாரிஜாதத்திற்கு இவளைக் கண்டாலே பிடிக்காது. இருந்தும் என்ன செய்வது என்று பேச்சு கொடுத்து உபசரித்தாள். பாரிஜாதம் எதேச்சையாக மகனின் அறைக்குக் காபியை மகள் சாரதாவிடம் கொடுத்தனுப்பினாள். சாரதா மாடியறையில் இருந்து அலற, அனைவரும் அங்கு சென்று பார்த்தபோது தசரதனும் வெந்நிலாவும் ஒரே அறையில் ஒரே கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். அதைக்கண்ட ரங்கம் பெரிய பண்ணையக்காரர் மகளை இப்படி வளைத்துப்


**Isbn Number**: 978-93-91115-46-3

போட்டுவிட்டதாக பாரிஜாதத்திடம் வாய் கூசாமல் சொன்னாள்.

பஞ்சாயத்துக் கூடியது தசரதன் வெந்நிலா கழுத்தில் தாலி கட்டினான். வெந்நிலா தான் நினைத்தது நடந்து விட்டது என்று எண்ணி மகிழ்ந்தாள். அவள் தன் தந்தையுடன் சென்னை செல்லத் தயாரானாள். ஆனால் அவளின் தந்தை அழைத்துச் செல்லவில்லை. அவள் மாடி அறைக்குள்ளேயே அடங்கிப்போனாள். தசரதனுக்கு வேலை கிடைத்தது. சேலத்தில் ஸ்டேஷன் மாஸ்டர் பணி. வேலைக்காக தசரதனும், வெந்நிலாவும் சென்றனர். அங்கே இரயில்வே குடியிருப்பில் ஒரு சிறிய வீட்டில் தங்கினர். அந்த வீட்டில் வெந்நிலாவும் தசரதனும் ஒருவருக்கொருவர் அன்பாக வாழ்ந்து வந்தனர். இருவரும் சிறு சிறு சண்டைகளுக்கிடையே வாழ்வை நடத்தினர். செல்வந்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள்.


**Isbn Number**: 978-93-91115-46-3

கிராமத்தில் வாழ்ந்து வந்த தசரதனைத் திருமணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்துபவள். இதனை,

> **அவனை சென்னைக்கு வரச்சொல்லி அவள் கேட்கவில்லை. அவளுக்கே அவன் அவளைப் பின் தொடர்ந்து வரமாட்டான் என்று தெரியும். அதனால் அந்தக் கேள்வியைக் கேட்காமல் மனம் விரும்பி அவனுடன் எளிய வாழ்வை அவள் வாழ்கிறாள் (முத்துலட்சுமி ராகவன், பூமிக்கு வந்த நிலவு, ப. 303)**

என்னும் கூற்றில் வெந்நிலாவின் பண்பு வெளிப்படுகிறது. சென்னையில் இருந்து நாராயணமூர்த்தி மகளைப் பார்க்க சேலத்திற்கு வந்தார். மகளின் எளிமையான வாழ்வைக் கண்டு வியந்து போனார். தசரதனுக்கு ஸ்ரீராமன் என்ற மகன் பிறந்தான். அக்குழந்தையின் காதணிவிழா குடும்பத்துடன் சிறப்பாக நடைபெற்றது. தசரதன் வெந்நிலா குரூப் ஆப் கம்பெனியின் எம்.டி ஆகவும்,


**Isbn Number**: 978-93-91115-46-3

வெந்நிலா அக்கம்பெனியின் நிர்வாகியாகவும் பதவி வகித்தனர். இதனை,

> **யாருக்கும் கட்டுப்படாத தசரதன் அவளின் காதலுக்குக் கட்டுப்பட்டான். ராமன் இருக்குமிடம் தான் சீதைக்கு அயோத்தி என்று சொன்னவன்... சீதையைப் பின்பற்றி அவளுக்காக அவளுடைய அடையாளத்திற் காக சென்னையை நோக்கிச் சென்றான்...**
>
> **இன்று தசரதன் வெந்நிலா குரூப்ஸ் ஆப் கம்பெனிகளில் ஒன்றின் எம்.டி...! ...**
>
> **காதல் எதையும் சாதிக்கவல்லது. அது நிலவை பூமிக்கும் வரவழைக்கும். சுட்டெரிக்கும் சூரியனை நிலவுக்குக் குடைபிடிக்கவும் வைக்கும்.**
>
> **வெந்நிலா பூமிக்கு வந்த நிலவு...! தசரதனோ அவளுக்கு நிழல் கொடுக்க குடை பிடிக்கும் சூரியன்...! (மேலது, ப. 304)**


**Isbn Number**: 978-93-91115-46-3

என்று படைப்பாசிரியர் படைத்துக்காட்டியுள்ளார். வாழ்வியல் தொடர்போடு அமைக்கப்பெற்ற இந்த நாவல் காதலின் வலிமையைக் காட்டுவதாக அமைகிறது.

2. *அக்கினிப்பறவை* – கதைமாந்தர்கள், இந்நாவலில்,

அன்னம் - சந்தியாவின் தாய்

தயானந்தன் - சந்தியாவின் தந்தை

காந்தாமணி – சந்தியாவின் சித்தி

ஆதித்தன் - சந்தியாவின் கணவன்

சந்தியா – அன்னத்தின் மகள்

சந்தானலட்சுமி – அன்னத்தின் தோழி

பிரதீப் - சந்தானத்தின் மகன்

ஆடியபாதம் - வேலையாள்

பரமசிவம் - பியூன்

விமலா – நிர்வாக அதிகாரி

நாராயணன் - பொது மேலாளர்


**Isbn Number**: 978-93-91115-46-3

தணிகாசலம் - ஆதித்தனின் தாத்தா

மலையப்பன் - ஆதித்தனின் அப்பா

பூங்காவனம் - ஆதித்தனின் அம்மா

வெள்ளையம்மாள் - ஆதித்தனின் சித்தி

முனியாண்டி – வேலையாள்

காளியப்பன் - வெள்ளையம்மாள் மகன்

சித்தய்யன் - வெள்ளையம்மாள் மகன்

சுப்பய்யன் - வெள்ளையம்மாள் மகன்

வனஜா – அலுவலகப் பணியாளர்கள்

பிரியா – அலுவலகப் பணியாளர்கள்

வசுமதி – அலுவலகப் பணியாளர்கள்

சுசி - அலுவலகப் பணியாளர்கள்

போன்ற கதைமாந்தர்களைப் படைப்பாளர் படைத்துக் காட்டியுள்ளார்.

**கதைக்கரு**

கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண் விடாமுயற்சியால் தன்னுடைய ஒரே மகள்


**Isbn Number**: 978-93-91115-46-3

சந்தியாவை பட்டப் படிப்பு படிக்க வைத்து சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு உயரச்செய்கிறாள். இது பெண்ணின் துணிவையும் தன்னம்பிக்கையை எடுத்துரைக்கும் நாவலாக அமைகிறது.

**கதைச்சுருக்கம்**

மேக்னா பவர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் சென்னையில் இயங்கிக் கொண்டிருந்தது. அங்கு ஜி. எம் பதவியில் இருந்தவர் ஆதித்தன். ஆதித்தனைக் கண்டால் அங்குப் பணியாற்றும் அனைவரும் பயப்படுவர். அங்குப் பணியாற்றும் பணியாளர்கள் ஆதித்தனுக்கு துர்வாச முனிவர் என்ற பட்டப் பெயர்; வைத்திருந்தனர். ஆதித்தன் என்றாலே வேலையில் கண்டிப்புடன் செயல்படுவான். அவன் பணிநேரத்தை வீணாக்காமல் சரியாக முறையாகச் செய்யவேண்டும் என நினைப்பவன்.

அன்னத்தின் மகள் சந்தியா. சந்தியாவிற்கு ஏழு வயது இருக்கும் பொழுது அன்னத்தின் கணவர்


**Isbn Number**: 978-93-91115-46-3

தயானந்தன் காந்தாமணி என்ற பெண்ணை இரண்டாவது திருமணம் செய்துகொண்டு வந்து மனைவியிடம் கூறினான். அதனால் அன்னம் மிகவும் வருந்தினாள். கணவன் அவளைப் படிக்காதவள் என்று ஏளனப்படுத்தினான். ஆனால், அவள் தன் சுயமரியாதைதான் முக்கியம் என்று நினைத்து தனது கணவரை விட்டு தன்னுடைய குழந்தையுடன் ஏதாவது ஒரு வேலை செய்து பிழைத்துக் கொள்வேன் என்று கூறி மன உறுதியுடன் வீட்டைவிட்டு வெளியேறினாள்.

வீட்டை விட்டு வெளியே வந்த அன்னத்திற்கு தோள் கொடுத்தது அவளின் தோழி சந்தானலட்சுமி. சந்தானலட்சுமியும் அவளது கணவர் கோபாலனும் அன்பானவர்கள். அவர்களுக்குப் பிரதீப் என்ற மகன் இருந்தான். அவன் சந்தியாவைத் தன் தங்கையாகவே நினைத்து வளர்த்தான். அன்னம் தனது எட்டு பவுன் தங்க நகையை விற்று உணவகம்


**Isbn Number**: 978-93-91115-46-3

தொடங்க சந்தானலட்சுமி உதவினாள். சந்தியா பிரதீப்பை அண்ணனாகவும், சந்தானலட்சுமியை பெரியம்மாவாகவும், கோபாலனைப் பெரியப் பாவாகவும் சொந்தம் கொண்டு வளர்ந்தாள்.

அன்னம் சிறியதாக ஆரம்பித்த இட்லிக் கடை சந்தியா வளர வளர அம்மா உணவகம் என்று வளர்ந்தது. சந்தியாவை நன்கு படிக்க வைத்தாள். அன்னம் யாருக்கும் எந்தவொரு தீங்கும் செய்யக்கூடாது என்று நினைப்பவள். அம்மா உணவகத்தின் முதலாளியாகவும் வளர்ந்தாள். இதனை,

**என் வாழ்க்கயில் நான் தோத்துப் போய் அநாதையாய் பெண் குழந்தையோடு வெளியே வந்தப்போ எனக்குத் தாலி கட்டின மனுசன் சொன்னான். 'நீ படிக்காத முண்டம்டி..எப்படிப் பிழைப்பேன்னு. அப்ப எனக்கு வழிகாட்டினது இந்தத் தொழில்டி.**


**Isbn Number**: 978-93-91115-46-3

**இப்போ நான் இரண்டு பேருக்குச் சம்பளம் கொடுக்கிற முதலாளி' (முத்துலட்சுமி ராகவன், அக்கினிப்பறவை, ப. 133)**

என்ற கூற்றின் மூலம் அறியலாம்.

மேக்னா பவர்ஸ் லிமிடெட் அலுவலகத்தில் ஜி.எம் ஆதித்தன் அவர்களுக்கு செயலாளராக சந்தியா வேலைக்குச் சேர்ந்தாள். ஆதித்தனின் பேச்சுக்கு தகுந்த பதிலடி கொடுத்து சந்தியா பணிபுரிந்தாள். சந்தியாவின் அறிவாற்றலைக் கண்டு ஆதித்தனே சந்தியாவை விரும்பினான்.

மலையப்பன் பூங்காவனம் தம்பதியரின் மகன் ஆதித்தன். ஆதித்தன் குழந்தையாக இருக்கும்போதே மலையப்பனை விட்டு வடநாட்டு வாலிபனோடு ஓடிப்போய்விட்டாள். அதனால் அவனது தாத்தா தணிகாசலத்தின் வளர்ப்பில் வளர்ந்து படித்து இன்று ஒரு கம்பெனியின் ஜி.எம் பதவி வகிக்கும் அளவிற்கு உயர்ந்துள்ளான். ஆதித்தன் மனதில் அம்மா செய்த


**Isbn Number**: 978-93-91115-46-3

குற்றச் செயல் பதிந்து விட்டதால் பெண்களைக் கண்டாலே எரிந்து விழும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.

ஆதித்தனின் தாய் ஓடிப் போனவுடன் மலையப்பனுக்கு இரண்டாம் திருமணம் வெள்ளை யம்மாளுடன் நடைபெற்றது. வெள்ளையம்மாளுக்கு மூன்று மகன்கள் பிறந்தனர். ஆதித்தன் தன் வயதான தாத்தாவைப் பார்க்க மட்டுமே தன் சொந்த ஊரான பனையூர் கிராமத்திற்கு வருவான்.

ஆதித்தனின் நண்பன் ராதாகிருஷணன் வீட்டு விழாவில் கலந்து கொண்டான். அங்கு வந்திருந்த தன் தாய் பூங்காவனத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். அவள் வடநாட்டுக்காரனோடு ஓடிப்போய் ஒரு மகன் மகளுக்குத் தாயாக நிற்கிறாள். உயர்ந்த நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்தவளாக இருந்தாள். அந்த விழாவில் தன் தாயைக் கண்ட ஆதித்தனுக்கு அதிர்ச்சியாக


**Isbn Number**: 978-93-91115-46-3

இருந்தது. பெற்ற பிள்ளையை அநாதையாக விட்டு விட்டு வேறு ஒருவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற வேதனை சிறிதும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கிறாள். இரு குழந்தைகளுக்குத் தாயாக வலம் வருகிறாள் என்பதை நினைத்து ஆதித்தனின் உடல் நடுங்கியது. அன்று இரவு முழுவதும் அவன் தூங்கவே இல்லை.

அடுத்த நாள் அலுவலகத்திற்குச் சென்றான். அங்கு சுய நினைவில்லாமல் மேசையின் மீது சரிந்தான். அதைக் கண்ட சந்தியா உடனடியாக ஆதித்தனை மருத்துவமனையில் சேர்த்தாள். மேலதிகாரியிடம் தகவலைச் சொல்லி அன்று நடக்கவிருந்த கலந்தாலோசனைக் கூட்டத்தை வேறு அதிகாரி மூலம் வெற்றிகரமாக நடத்திமுடித்தாள்.

மருத்துவமனையில் இருந்த ஆதித்தனை சந்தியா நன்றாகக் கவனித்துக் கொண்டாள். அவளின் அன்பில் ஆதித்தன் மனதைப்


**Isbn Number**: 978-93-91115-46-3

பறிகொடுத்தான். சந்தியாவின் தாயிடம் பெண் கேட்டான். அன்னமும் மகளின் திருமணத்திற்குச் சம்மதித்தாள். திடீரென அன்னம் மரணப் படுக்கைக்குச் செல்ல ஆதித்தன் சந்தியா திருமணம் நடைபெற்றது. ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையையும் பெற்றெடுத்தனர். மலையப்பன் தன் மகனையும் மருமகளையும் மனநிறைவோடு வரவேற்றார். பேரன் பேத்திகளுக்குக் காதுகுத்துவிழா நடத்தி ஊருக்கே விருந்து வைத்தார். ஆதித்தனும் சந்தியாவும் புதிதாக கட்டிய வீட்டிற்குப் புதுமனை புகுவிழா நடத்தி அதில் குடியேறினர். அக்கினிப் பறவையாய் இருந்த ஆதித்தன் சந்தியாவின் அன்பில் இன்பமாய் வாழ்ந்தான்.

இக்கதையில் கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண்ணின் வாழ்வியல் சிக்கல்களையும் அப்பெண் அதனை எதிர் கொள்ளும் முறையினையும்


**Isbn Number**: 978-93-91115-46-3

தன்னுடைய நுண்ணிய நிலையில் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

3. *மழைச்சாரலாய் மனம் நனைத்தாய்* - கதை மாந்தர்கள், இந்நாவலில்,

சாருலதா – சக்திவேலின் மகள்

ஆத்மாராம் - சங்கரன் மகன்

சங்கரன் - ஆத்மாராம் அப்பா

பார்வதி – ஆத்மாராம் அம்மா

சுதாகரன் - ஆத்மாராம் நண்பன்

சீத்தாராம் - ஆத்மாராமின் அண்ணன்

நித்யா – ஆத்மாராமின் அண்ணி

சக்திவேல் - சாருலதா அப்பா

புஷ்பவள்ளி – சாருலதா அம்மா

சொர்ணலதா – சாருலதா தங்கை

விக்ரம் - அலுவலகப் பணியாளர்

காவ்யா – அலுவலகப் பணியாளர்

ஷீபா - அலுவலகப் பணியாளர்


**Isbn Number**: 978-93-91115-46-3

போன்ற கதைமாந்தர்களைப் படைப்பாளர் படைத்துக் காட்டியுள்ளார்.

**கதைக்கரு**

ஆத்மாராம் என்பவர் ஐ.டி கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார். அவருடன் பணிரியும் சாருலதாவைக் காதலிக்கிறார். அதனையறிந்த ஆத்மாராமின் அண்ணி சாருலதாவிடம் ஆத்மாராமின் இளமைக்காதலைச் சொல்லி திருமணத்தைத் தடுத்து நிறுத்தும் சூழ்ச்சியைச் செய்கிறாள். இறுதியில் காதல் திருமணம் நிறைவேறுவதாகக் இந்நாவல் அமைந்துள்ளது.

**கதைச்சுருக்கம்**

சாருலதா தகவல் தொழில்நுட்பத்துறையில் பணிபுரியும் இளமையான துடிப்பான பெண். அவள் பணிபுரியும் நிறுவனத்தின் குழுத்தலைவராக ஆத்மாராம் பணிபுரிகிறார். அவருக்குப் பெண்கள் என்றாலே பிடிக்காது. கோபத்தைக் காட்டும் குணம்


**Isbn Number**: 978-93-91115-46-3

கொண்டவர். ஆனால் அவரின் நண்பர் சுதாகரன் பெண் என்றால் வணங்கும் இயல்புடையவர்.

ஆத்மாராமின் பெற்றோர் சங்கரனும் பார்வதியும் ஆத்மாராமின் திருமணம் பற்றிப் பேசும்போதெல்லாம் அவன் மறுப்பு சொல்லிக் கொண்டே இருந்தான். தொழில்நுட்பத்துறையில் பணிபுரியும் சாருலதா விக்ரமின் குழுவிலிருந்து ஆத்மாராமின் குழுவிற்கு மாற்றப்பட்டாள். ஆத்மாராம் சாருலதாவைத் தன் அலுவலக அறையிலேயே திட்டப்பணிகளைச் செய்ய தனிப் பகுதியை ஒதுக்கினான். இருவருக்கும் இடையேயான மோதல் காதலாக மாறியது.

சாருலதாவின் தந்தை என்கவுண்டர் ஏகாம்பரம் என்றழைக்கப்படும் வால்டர் சக்திவேல். அவரிடம் தான் காதலிக்கும் தகவலைச் சொன்னாள். அவரும் ஆதமாராமை வரச்சொன்னார். ஆத்மாராமிடம் பேசினார். அவருக்கு ஆத்மாராமைப்


**Isbn Number**: 978-93-91115-46-3

பிடித்துப் போனது. அதனால் குடும்பத்துடன் பெண் பார்க்க வரச்சொல்லிவிட்டார்.

ஆத்மாவிற்குப் பெண் பார்க்க வருவதென்றால் தன் வீட்டில் உள்ள ராட்சசியான தன் அண்ணியையும் அழைத்து வரவேண்டுமே என்ற கவலை இருந்தது. இருப்பினும் தன் விருப்பத்தை பெற்றோரிடம் தெரிவித்தான். பெற்றோருடன் அண்ணன் அண்ணியும் பெண் பார்க்கச் சென்றனர். அவனுடைய அண்ணி நித்யா சாருலதாவிடம் ஆத்மாராமின் முந்தைய காதல் பற்றிக் கூறினாள். சாருலதாவின் தலையில் இடி விழுந்ததைப் போன்று இருந்தது.

திருமணம் வேண்டாம் என்று கூறிவிட்டாள் சாருலதா. சாருலதா வேலைக்குச் சென்றாள். ஆத்மாவைக் கண்ணால் கண்டால் போதும் என்றிருந்தாள். ஆத்மாவைக் காணும்போதெல்லாம் அவள் மனம் சஞ்சலப்படும்.


**Isbn Number**: 978-93-91115-46-3

ஆத்மாராமும் சாருலதாவின் மேல் மிகுந்த காதல் கொண்டிருந்தான். அதனால் சாருலதா விலகினாலும் ஆத்மாராம் அவளை விடாமல் தன் காதலை மெய்ப்பித்தான். சாருலதாவிற்கு முன் வேறு ஒருத்தியை மனதார நினைத்துள்ளான் என்ற செய்தி அறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தாள் சாருலதா. ஆத்மராமிடம் கேட்டதற்கு அது பள்ளிக்காதல். அவளை மனதார காதலிக்கவில்லை என்று கூறினான். இதற்கிடையில் சக்திவேல் தன் மகளுக்கு வேறு வரன்களைப் பார்த்தார். ஆனால் சாருலதா சம்மதிக்கவில்லை. சாருலதாவின் தங்கை சொர்ணலதா ஆத்மராமைச் சந்தித்து கனடா செல்லுமாறு அறிவுறுத்தினாள்.

அதன்படி அவனும் கனடா செல்வதையறிந்து சாருலதா தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டாள். சக்திவேல் ஆத்மாராமைச் சந்தித்து சாருலதாவின் நிலையைக் கூறினார். ஆதமாராம் கனடா


**Isbn Number**: 978-93-91115-46-3

பயணத்தைத் தவிர்த்து உடனே மருத்துவமனைக்கு விரைந்து சென்றான். இருவரின் மனமும் இணைந்தது. இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இணைந்த காதலர்கள் இன்பம் துய்த்து வாழ்ந்தனர். இதனை,

> **மழைச்சாரலாய் மனம் நனைக்கும் காதலை ஆதமாவிற்கு அள்ளி அள்ளிக் கொடுத்தாள் சாருலதா. அவளின் அந்தக் காதல் மழையில் நனைந்த ஆத்மா பதிலுக்கு அதே காதல் மழையைப் பொழிந்து அவளை நனைய வைத்தான்...**
>
> **காதல் என்பது மழை.. அந்த மழைச்சாரலில் மனம் நனைந்து விட்டவர்களுக்குத்தான் தெரியும்...**
>
> **காதல்.. வாழவைத்து உய்விக்கும் மகாசக்தி (முத்துலட்சுமி ராகவன், மழைச்சாரலய் மனம் நனைத்தாய், ப. 320)**


**Isbn Number**: 978-93-91115-46-3

என்று படைப்பாசிரியர் கதையை நிறைவு செய்கிறார். உண்மைக் காதல் எத்தனை சூழ்ச்சிகள் தடுத்தாலும் அதனை வெல்லும் என்ற உண்மையை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

4. *அந்திவானம்* – கதைமாந்தர்கள், இந்நாவலில்,

சங்கர் - பூங்கொடியின் அண்ணன்

யமுனா – பூங்கொடியின் அண்ணி

மாளவிகா – சங்கர் மகள்

பூங்கொடி – பிரசன்னாவின் மனைவி

வசந்த் - பிரசன்னாவின் மகன்

சாந்தி – பூங்கொடி தோழி

கோவிந்தராஜன் - சங்கரின் அப்பா

கமலம் - சங்கரின் அம்மா

வரதராஜன் - சங்கரின் சித்தப்பா

கோதை நாச்சியார் - சங்கரின் சித்தி

விஷால் - சாண்டில்யன் மகன்

பொற்கொடி – விஷாலின் அம்மா


**Isbn Number**: 978-93-91115-46-3

அகிலாண்டம் - பிரசன்னாவின் பெரியம்மா

மேகா – விஷா லின் அத்தை மகள்

ஆகிய கதை மாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**கதைக்கரு**

காதலித்துத் திருமணம் செய்துகொண்ட ஒரு பெண்ணின் துயரத்தைக் காட்டுவதாக இக்கதை அமைகிறது. பூங்கொடி என்பவள் பிரசன்னாவைக் கதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார். இதனையறிந்த பூங்கொடியின் பெற்றோர் தற்கொலை செய்து கொள்கின்றனர். பெற்றோர் இறந்ததை எண்ணி மிகவும் மனவேதனை அடைகிறாள். தான் காதலித்தது குற்றமா? என்று வேதனை அடைந்து கடைசியில் அவளும் இறந்தே போகிறாள் என்பதாகக் கதை அமைகிறது.

**கதைச்சுருக்கம்**

சங்கரின் தாய் தந்தையர் விபத்தில் இறந்துவிட்டனர். அதனால் சங்கரின் சித்தப்பா


**Isbn Number**: 978-93-91115-46-3

வரதராசன் சங்கரை தத்துப்பிள்ளையாக வளர்த்து வந்தார். அவருக்கு பூங்கொடி என்ற மகள் இருக்கிறாள். சங்கர் பூங்கொடி ஆகிய இருவரும் ஒரு தாய் பிள்ளைகள் போல அண்ணன் தங்கையாக வளர்ந்து வந்தனர்.

பூங்கொடி பிரசன்னாவை விரும்பினாள். அதனைத் தன் அண்ணன் சங்கரிடம் கூறினாள். இது போன்ற காதல் குடும்பத்துக்கு ஒத்துவராது என்று சங்கர் கூறினான். அதனைக் கேட்காமல் பூங்கொடி பிரசன்னாவைத் திருமணம் செய்து கொண்டாள். மகள் காதல் திருமணம் செய்து கொண்டதை நினைத்து வருந்தி இறந்துவிட்டனர். ஊட்டியில் பிரசன்னாவும் பூங்கொடியும் பெரிய பங்களாவில் வாழ்ந்து வந்தனர். பூங்கொடி திருமண வாழ்வில் சற்று ஒட்டுதல் இல்லாமல் விலகியே இருந்தாள். சங்கர் அடிக்கடி தங்கையைப் பார்த்து வந்தான்.


**Isbn Number**: 978-93-91115-46-3

சங்கருக்கும் யமுனாவுக்கும் திருமணம் நடந்தது. மாளவிகா என்ற பெண் குழந்தை பிறந்தது. பிரசன்னா பூங்கொடிக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. மாளவிகா வளர்ந்து கல்லூரிக்குச் சென்றாள். கல்லூரி விழாவிற்காக நன்கொடை வாங்க விஷரல் குரூப் ஆப் கம்பெனியின் எம்.டி விஷாலை சந்தித்து விழாவிற்கு அழைத்தாள். விஷால் மாளவிகாவை விரும்பினான். விஷால் மாளவிகா திருமணத்திற்கான திருமண வேலைகள் நடந்தது.

பிரசன்னாவிற்கு பத்திரிகை வைக்க சங்கர் ஊட்டிக்குச் சென்றான். அங்கே மறைந்த தன் தங்கையின் புகைப்படத்தைக் கண்டான். பத்திரிகையை மச்சினனுக்கு மரியாதையுடன் வைத்துவிட்டு ஊர் திரும்பினான்.

திருமணநாள் நெருங்கியது. மணமேடையில் விஷாலும் மாளவிகாவும் அமர்ந்திருக்க,


**Isbn Number**: 978-93-91115-46-3

பிரசன்னாவுடன் வசந்தன் திருமணத்திற்கு வந்திருந்தனர். அட்சதை வழங்க வந்த பெண்ணின் கையில் உள்ள தட்டில் இருந்த தாலியை வசந்தன் எடுத்துக் கொண்டான். மாளவிகாவைத் தனக்குத் திருமணம் செய்துகொடுக்க சங்கரிடம் கூறினான். சங்கரும் சம்மதித்தார். மாளவிகா வசந்தனுக்கு திருமணம் நடைபெற்றது. அதே வேளையில் விஷாலுக்கும் அவனுடைய அத்தை மகள் மேகாவிற்கும் திருமணம் நடந்தது.

வசந்தன் சங்கரைப் பழிவாங்கத்தான் மாளவிகாவைத் திருமணம் செய்து கொண்டான். ஆனால் மாளவிகா தன் அன்பால் வசந்தனைக் கட்டிப்போட்டாள். மாளவிகாவின் அறிவால் வசந்தனை நல்வழிப்படுத்தினாள். ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குடும்பமே அழகாக மாறியது. அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். இந்த உலகம் என்பது மனிதர்கள் இரைதேட வந்த


**Isbn Number**: 978-93-91115-46-3

இடம். இரையைத் தேடியபின் கூட்டுககுச் செல்லும் பறவைகள்போல் மனிதர்களும் நிரந்தரக் கூட்டுக்குச் செல்லவேண்டும் என்பதை,

> **அந்தி வானத்தில் பறவைகள் ... இரைதேடி முடித்து கூட்டுக்குத் திரும்பின... அவர்களும் வீட்டிற்குத் திரும்பினார்கள் (முத்துலட்சுமி ராகவன், அந்திவானம், ப. 272)**

என்றுகூறி கதையை நிறைவு செய்கிறார். இக்கதையில் மகள் காதலித்துத் திருமணம் செய்துகொண்டதால் பெற்றோர் மனவேதனை அடைந்து தற்கொலை செய்து கொள்ளும் நிலையை ஆசிரியர் நுட்பமாக விவரித்துள்ளார்.

**நிறைவாக**

உரைநடைத் தோற்றங்கள் நாவல் இலக்கிய வரலாற்றில் முக்கியப் பங்கு வகிக்கிறது. உலக இலக்கியங்களில் ரோமானியரின் ‘லூசியசின் உருமாற்றங்கள்’ என்னும் நாவலே முதல் நாவலாக


**Isbn Number**: 978-93-91115-46-3

அழைக்கப்படுகிறது. இந்திய நாவல்களில் முதன்முதலில் வங்காள மொழியில் தான் வெளிவந்தது.

தமிழ் நாவல்கள் சமுதாயத்தின் பல்வேறு கூறுகளைக் கருப்பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. ஒரு பெண் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருப்பினும், திருமணத்திற்குப் பின் தன் கணவனின் குடும்பச் சூழல் அறிந்து நடந்துகொள்ள வேண்டும் என்பதை பூமிக்கு வந்த நிலவு என்ற நாவலில் குறிப்பிட்டுள்ளார். கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண் விடாமுயற்சியால் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடையும் பெண்ணின் துணிவை எடுத்துரைக்கிறது. காதலித்துத் திருமணம் செய்துகொண்ட ஒரு பெண்ணின் துயரத்தைக் காட்டுகிறார். முத்துலட்சுமி ராகவன் நாவல்களில் இடம்பெற்றுள்ள பாத்திரப்படைப்பு, கதைக்கரு,


**Isbn Number**: 978-93-91115-46-3

கதைப்போக்கு, கதைச்சுருக்கம் ஆகிய செய்திகள் மேற்கண்டபடி ஆராயப்பட்டுள்ளன.

### துணைநூற் பட்டியல்


[1] அகிலன். கதைக்கலை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை , 1981.

[2] இராமலிங்கம், மா. நாவல் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மு.ப. 1976. [1]

[3] கைலாசபதி, க. தமிழ் நாவல் இலக்கியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600098, மு.ப. 1987.

[4] சச்சிதானந்தன். வை. மேலை இலக்கிய சொல்லகராதி, மாக்மில்லன் இந்தியா லிமிடெட், சென்னை, 1983.

[5] முத்துலட்சுமி ராகவன். பூமிக்கு வந்த நிலவு, லட்சுமி பாலாஜி பதிப்பகம், சென்னை-600035, மு.ப. 2013.



**Isbn Number**: 978-93-91115-46-3

[6] முத்துலட்சுமி ராகவன். அக்கினிப்பறவை , லட்சுமி பாலாஜி பதிப்பகம், சென்னை-600035, இ.ப. 2017.

[7] முத்துலட்சுமி ராகவன். மழைச்சாரலய் மனம் நனைத்தாய், லட்சுமி பாலாஜி பதிப்பகம், சென்னை-600035, மு.ப. 2013.

[8] முத்துலட்சுமி ராகவன். அந்திவானம், லட்சுமி பாலாஜி பதிப்பகம், சென்னை-600035, 2015.

[9] மோகன், மு. வ. வின் நாவல்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், மு.ப. 1972.

[10] H. John ospers, Art Philosophy of "The New encyclopaedia Britanica, Chicago. F.E. 1973.

[11] The Readers Digest, Great Encyclopaedic Dictionary, Vol. III Aph Publishing Corporation, New Delhi. 2000.



**Isbn Number**: 978-93-91115-46-3